


# ராமு வாத்தியார்

## கைதடி நாவற்குழி தெற்கு

# எமது கிராமத்தின் வரலாறு




அமரர் வேலுப்பிள்ளை இராமர்

ஓய்வுநிலை அதிபர்

# ராமு வாத்தியார்

# எமது கிராமத்தின் வரலாறு

அமரர் வேலுப்பிள்ளை இராமர்
ஓய்வு நிலை அதிபர்

**“எமது கிராமத்தின் வரலாறு” நூலானது வேலுப்பிள்ளை இராமர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளான 28.01.2024 அன்று கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது**

All rights reserved. No part of this book may be reproduced in any form or by any means recording or otherwise, without the prior permission of the publisher.

*வெளியீட்டாளரின் எழுத்து மூலமான ஒப்புதல் இன்றி. இந்நூலை மறுபதிப்புச் செய்யவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கவோ. அச்சிடவோ. நகல் எடுக்கவோ. மின்னியல் வழியில் பதிப்பிக்கவோ தடை செய்யப்பட்டுள்ளது.*

**வெளியீடு**

*குடும்பத்தினர்*

*கிளிநொச்சி*

# பொருளடக்கம்

**அணிந்துரை**
*திரு. கந்தையா தேவநேசன்*

**என்னுரை**
*திரு. வே.இராமர்*

**வாழ்த்துரை -அகல் விளக்கொன்று பிரகாசிக்கின்றது**
*திரு. கந்தையா மயில்வாகனம்*

**வையத்து வாழ்வாங்கு வாழ்தல்**
*திரு. கந்தையா நவரத்தினம் (டாக்டர்)*

**நான் அறிந்த இராமு வாத்தியார்**
*திரு. க.இ.கமலநாதன்*

**யா/கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையும் அதிபர் திரு.வே.இராமர் அவர்களும் - சில நினைவுகள்**
*திரு. பி. முத்துலிங்கம்*

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும்**
*திரு. ஐ.தனஞ்செயன்*

**இராமு Sir கிராமத்தின் வரலாற்று நூலிற்கான வாழ்த்துரை**
*திருமதி வசந்தாதேவி மேகலிங்கம்*

**இராமருக்கு ஒப்பானவரே இராமர்**
*திரு. செ.பேரின்பநாதன்*

**எனது பார்வையில் எமது பாடசாலை**
*திரு. சி.ஜெயகணேஷன்*

**இராமர் அவர்களைப் பற்றி ஓர் குறிப்பு**
*திரு. இ.கந்தசாமி*

**எமது கிராமத்தின் வரலாறு**
*திரு. வே.இராமர்*

**அழிந்து செல்லும் கிராமியம்**
*திருமதி ச.ஜெயந்தி*

**ஆலய வழிபாட்டில் இசை**
*திருமதி டுயந்தினி யூட்பற்றிக்*

**வெற்றி !**

**தமிழ் வளர்த்த பெரியார் தனிநாயகம் அடிகள்**
*திரு. கந்தையா மயில்வாகனம்*

**பேராதனை தாவரவியற் பூங்கா**
*செல்வி நிறைஞ்சன் தட்சாயிணி*

**வரலாற்று புகழ் மிக்க பழமை வாய்ந்த சிகிரியா மற்றும் சீகிரியா சுவரோவியம்**
*செல்வி ஆனந்தராசா டிலற்ஷிகா*

**பிரசித்தி பெற்ற தம்புள்ளை பொற்கோவில்**
*செல்வி பவானந்தன் கலாஜனி*

**புதிய வழி சமைப்போம்**
*திரு. வே.இராமர்*

**நன்றி**
*திரு. வே.இராமர்*

**நன்றி**
*குடும்பத்தினர்*

# அணிந்துரை

கடலலைகள் தாலாட்ட துயிலுகின்ற தீவினில் மணிமுடியாய்த் திகழும் வட மாகாணத்தின் மைல் கல்லாய்த் திகழும் யாழ் நகருக்கு அருகில் சைவமும் தமிழும் தழைத்தோங்க உன்னத ஊராய் விளங்கி நிற்பது கைதடி நாவற்குழி தெற்குக் கிராமம் ஆகும்.

“தமக்கென வாழா பிறர்க்கென நோற்பர்” வாழும் அழகிய கிராமம் இதுவாகும். கண்ணைக் கவரும் வயல் வெளிகளும், மனதை ஒருமுகப்படுத்தும் ஆலயதரிசனங்களும், கல்வியும் ஒழுக்கமும் புகட்டும் பாடசாலையும், மக்கள் தேவை புரிந்து சேவை செய்யும் சங்கங்களும், கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என உணர்த்தும் மனிதநேயமும் ஒற்றுமை வாழ்வும் எடுத்துக்காட்டான மிடுக்கோடு இங்கு இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

தொல்காப்பியம் வகுத்த நானிலங்களில் மருதமும், நெய்தலும் இணைந்த அழகிய கிராமம் இதுவாகும். கடலின் அலைகள் தாலாட்ட, செந்நெல் வயற்கதிர்கள் அசைந்தாட, சோலைக்குயில்கள் இசைபாட ஆலய தரிசனங்களும், கிராமிய நிகழ்வுகளும், கூட்டு வாழ்க்கைப் பண்பாடும் நிறைந்து காணும் பூமி கைதடி நாவற்குழி தெற்குக் கிராமம் ஆகும்.

விசேட தினங்களில் ஊரே களைகட்டும். இன்னல்களின் போது உறவுகள் தோள் கொடுக்கும். தற்பெருமை கொள்ளாத அறிஞர்களும், இல்லாளின் இயற்கை எழிலும், மழலைகளின் குதூகலிப்பும், அனுப வ ஆசான்களாய் முதியவர்களும் ஒன்றாய் வாழும் அழகிய கிராமம் கைதடி நாவற்குழி தெற்குக் கிராமம் ஆகும்.

மண்ணைப் பொன்னாக்கும் மகத்தான பூமியின் வளர்ச்சிப் போக்கினை திரு.வே.இராமர் தனது அறிவினைச் சொற்கள் ஆக்கி ஊரின் சிறப்பினை வரலாற்றுச் சிற்பமாக்கியிருப்பதனை எமது கிராமத்தின் வரலாறு என்ற நூலிற் காண முடிகின்றது.

ஊரின் தோற்றம், ஆரம்ப வாழ்வியல் முறை, பின்னர் படிப்படியான வளர்ச்சி, இன்று எம் ஊரின் பெருமை என்ற போக்கிற் தன் ஊரின் வரலாற்றைப் பதிவு செய்துள்ளமை தனித்துவமாக உள்ளது.

.

*மக்கள் சேவையே மகேசன் சேவை என்று உணர்ந்து சேவையாற்றி ஓய்வு நிலை அதிபர்  இராமர் எனும் பெரியவர் செயலாற்றியுள்ளமை காலத்தால் பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.*

*இவரது பணி தொடரவும், கிராமம் தழைத்தோங்கவும், சேவை பரவிப் பெருகவும், இறைவன் அருள்பாலிக்க மனதார வேண்டி நிற்கின்றேன்*

**திரு. கந்தையா தேவநேசன்**
*ஓய்வு நிலை அதிபர்*
*யா / கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்*

# என்னுரை

*நாடு, நகரம், பட்டினம் என்பவற்றின் வரலாற்றை விட ஒரு கிராமத்தின் வரலாறு காத்திரமானது. கிராமத்திலிருந்தே பண்பாடு, அடிப்படைக் கலாசார விழுமியங்கள் போன்றவை தோற்றம் பெறுகின்றன. இவை காலவோட்டத்தில் மாற்றமடைந்தாலும், பல பண்பாட்டு சீரமைப்புக்கள் தொடர்ந்தும் அம்மக்களால் பேணப்பட்டு வருவது கண்கூடு. இவை அம்மக்களை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்து நல்லதொரு சூழலை உருவாக்கி அவர்களை நற்பிரசைகளாக ஆக்கி வருவதை நாம் காணுகின்றோம். கிராமத்திலிருந்தே பண்பாடு, சமய விழுமியங்கள், கலாசாரம், ஒழுக்கம் போன்றவை தோற்றம் பெறுகின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒரு கிராமத்தின் வரலாறு மறைந்தும், மறந்தும் போகாமல் அடுத்த சந்ததியினரும் அறியக்கூடியதாக அவை காப்பாற்றப்படல் வேண்டும். வரலாறு எழுதப்படல் வேண்டும்.*

*கந்தையா கனகம்மா நிதியத்தின் காப்பாளர் திரு.க.மயில்வாகனம் அவர்கள் செய்து வரும் அறப்பணிகள் பலவற்றுள், நாவற்குழி பிரதேசத்திலுள்ள கிராமங்களின் வரலாறும் ஏனையோரால் அறியக்கூடியதாக எழுத வேண்டும் என்ற பெரு விருப்பம் கொண்டவராக இருந்தார். அந்த வகையில் கைதடி நாவற்குழி தெற்குக் கிராமத்தின் வரலாற்றை எழுதித் தரும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். தூண்டிக் கொண்டேயிருந்தார். நான் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தேன். ஒரு வரலாறு எழுதுவதாயிருந்தால் அதற்குரிய ஆதாரங்கள், சாட்சிகள், ஆவணங்கள் போன்றவை அவசியம் தேவைப்படுகின்றன. அந்த அளவுக்கு அவை இல்லாதபடியாலும் எனது முயற்சியை தள்ளிப்போட்டே வந்தேன். இந்நிலையில் கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் முன்றலில் சரஸ்வதி சிலை நிறுவும் முயற்சியில் அத்திவாரக்கல் நடும் வைபவத்துக்கு திரு.க.மயில்வாகனம் அவர்கள் என்னையும் அழைத்திருந்தார். அப்போது பாடசாலையின் முன்பக்கச் சுவரில் பாடசாலை இலச்சனையின் கீழ் 1959ம் ஆண்டு எனக் குறிப்பிட்டிருந்ததைக் கண்டு வேதனையுற்றேன். இந்த வரலாற்று உண்மை திரிபுபடுத்தியிருந்தமையாலும், பாடசாலை ஆரம்பம், அதன் வளர்ச்சி, கிராம அபிவிருத்தி போன்ற வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்டு மக்கள் தாம் விரும்பியவாறு கூறுவதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இதன் பொருட்டும் உண்மை வரலாற்றை மக்கள் அறிய*

வேண்டும் என்ற உந்துதலும், ஆர்வமும் கட்டுரை எழுதவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன் விபரங்களைக் கட்டுரையிற் காணலாம். இந்த உண்மைகளை ஆதாரங்களோடும், சாட்சிகளோடும் நிறுவ வேண்டியிருந்ததால் என்னையும் எனது பெயரையும் குறிப்பிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் என்ற வகையில் எனக்குத் தெரிந்த, அறிந்த, கேட்ட விடயங்களை வைத்து சுருக்கமாக எழுதியுள்ளேன். குறிப்பாகக் கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையில் 1984-1996 வரை 12 வருடங்கள் கடமையாற்றிய காலத்திற் பாடசாலை அபிவிருத்தியோடு, கிராம அபிவிருத்தியிலும் ஈடுபடும் வாய்ப்பு உண்டானது. இக்காலப் பகுதியில் நான் வகித்த அதிபர் பதவியோடு, கிராம சங்கத் தலைவர், கைதடி நாவற்குழி மகாவிஷ்ணு கடற் தொழில் கூட்டுறவுச் சங்கச் செயலாளர், மறவன்புலவு கிராமோதய சபைத் தலைவர், ஆலய செயலாளர் போன்ற பதவிகளால் உரிய அதிகாரிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்தது. இது கிராமத்தின் அபிவிருத்திக்கும் பாடசாலை அபிவிருத்திக்கும் பெரும் உதவியாக இருந்தது.

இம் மலருக்கு வாழ்த்துக்கள், ஆசிகள் சான்றோரிடம் கேட்ட பொழுது, நெய்தல் என்ற பெயரை வைக்கலாம் என்றார்கள். கட்டுரைகளை மாணவர், ஆசிரியரிடமிருந்தும் சில சான்றோரிடமும் இருந்தும் பெற்றுப் புகுத்தியுள்ளோம். இவ்வாறே இம்மலர் மலர்ந்துள்ளது. இம் மலரின் நறுமணத்தினை நுகரவேண்டியது இனி உங்கள் பொறுப்பு.

**வே.இராமர்**
*ஓய்வு நிலை அதிபர்*

### வாழ்த்துரை

# அகல் விளக்கொன்று பிரகாசிக்கின்றது.



நெய்தல் மலருக்கு வாழ்த்துரை எழுதுவதில் மிகுந்த மகிழ்வடைகின்றேன். பொதுவாக நெய்தல் என்றதும் கடலும் கடல் சார்ந்த நிலப்பரப்பு எனவும் கருதுவதுண்டு. ஆயினும் நெய்தல் என்பது ஆக்குவது, புனைவது, இணைப்பது, நிலைப்பது எனவும் கருதலாம்.

இப்பிரதேசத்தில் வாழ்பவர்களை பரதவர், மீனவர், முக்குவர், கரையாளர் எனப் பல பெயர்களில் குறிப்பிட்டாலும் அவர்கள் நீர் வேளாளர்கள் என்பதே மிகப் பொருந்தும். நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்பவர்களை வேளாளர், கமக்காரரர், விவசாயி என்று விளிப்பது போல உயிராபத்தைத் தரக்கூடிய கடல் மீதோடித் தொழிலைப் புரிபவர்களை நீர் வேளாளர் எனலாம். மானம் காக்கவென பாவோடிக் குறுக்கே இழையோடி இறுக்கி ஆடை நெய்து தருவதும் "நெய்தல்" தான். அவ்வாறே அல்லும் பகலும் அயராது உழைத்து மாணவர் கல்வியை அறுவடை செய்தலும் நெய்தல் தான். அவ்வாறு 60 வருடங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் ஒரு பாடசாலையை ஆரம்பித்து அறிவுடை சமூகமாக ஆக்கியதும் ஒருவகை நெய்தல்தான். ஆடை நெய்யும் வேளை அறுந்து வரும் இழையைப் பொறுமையாகப் பொருத்துவது போல, மிகப்

பொறுமையாகவும் சகிப்புத் தன்மையுடனும் வேலுப்பிள்ளை இராமர் இப்பிரதேசத்தில் ஓர் பாடசாலையை ஆரம்பித்தார். எமக்கு ஏன் தனிப் பாடசாலை எனக் கேட்டவர்களும், இருக்கின்ற பாடசாலைகளுக்கே கல்வி கற்க மாணவர்கள் வருவது குறைவு, அவர்களுக்குப் படிப்பதில் அவ்வளவு நாட்டம் இல்லை. இவர் ஒரு "புதிய பாடசாலை உருவாக்கப் போகின்றாராம்" எனக் கேலி செய்தவர்களும் பாடசாலை அமைக்கக் காணி வழங்க முன்வந்தவர்களையும், தயங்கி நின்றவர்களையும் உசுப்பேற்றித் தடுத்து விடப் பார்த்தவர்களும் ஏராளம். அப்போது மட்டுமல்ல இப்போதும் கூட எப்போதும் முற்போக்கான ஒரு செயலை ஆரம்பிக்கும் போதும் முன்னெடுத்துச் செல்லும் போதும் பலவிதமான நெருக்கடிகள், இடர்கள் செய்வதற்கென ஒரு தொகுதி மக்கள் இருப்பர். அவ்வாறான இடர்களை எல்லாம் சகித்துத் தாண்டி நிறுவிய பாடசாலை இன்று தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்குள் முதன்மையாக பேசப்படும் பாடசாலையாக மிளிர்கின்றது. இப்பிரதேச மாணவர்களும் மக்களும் தங்கள் வாழ்வு சிறப்படைய எழுந்த பாடசாலையை நன்றியுடன் பராமரிக்கின்ற இவ்வேளையில் வாழும் காலத்திலேயே தன் மனதில் கருக்கொண்டெழுந்த சிந்தனை உயர் வடிவெடுத்து நிமிர்ந்து நிற்பதைக் கண்டு அவரும் மகிழ்வடைவார். அவ்வேளையிலே இப்பிரதேசத்தில் கல்வி, சமூக ஒழுக்கம் சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டுவரும் ‘கந்தையா கனகம்மா’ நிதியமாகிய நாம் பாடசாலை வளாகத்துள் கல்வித் தெய்வம் எனச் சொல்லும் சரஸ்வதியைச் சிலை வடிவில் செய்து நிறுவி, அதனைப் பாடசாலைச் சமூகத்திடம் வழங்கும் நிகழ்வில் இவ்விழாவின் பதிவேடு மலர்கின்றமையானது சாலச் சிறந்த காலத்திற்கேற்ற முயற்சியாகும். அவ் வேளையிலும் கூட வழமைக்கு மாறாய் இப்பிரதேசத்தைச் சேர்ந்த கற்றவர்களிடமும் மாணவர்களிடமும் இருந்து ஆக்கங்களைப் பெற்றுப் பதிவு செய்வதென்பது உயர் சிந்தனையாகும் கற்றவற்றை எழுதச் செய்யும் செயலாகும். மிகவும் பாராட்டப்பட வேண்டியதும் ஆகும்.

**நில்லாவுலகை ஆக்கியும் காத்தும் மங்கை**
**நல்லாளோ டினேற்று உருவைப் பகிர்ந்தும்**
**பொல்லாவினை களறுத்துப் புத்திக் கூர்மையுடன்**
**நல்லாயுமை வைப்பான்(ள்) வாழ்க வளர்க**

**கந்தையா மயில்வாகனம்**
*காப்பாளர்*
*கந்தையா கனகம்மா நிதியம்*

# “வையத்து வாழ்வாங்கு வாழ்தல்”

"வையத்து வாழ்வாங்கு வாழ்தல்" என்பது எல்லோருக்கும் எளிதல்ல. தனக்கென வாழாது தான் வாழ்ந்த சமூகத்திற்கும் பயனுடையவராய் வாழ்பவர்கள் காலம் கடந்தும் நினைவுகளில் அழியாது இருக்கிறார்கள்.

அவ்வாறு தான் அமரர் திரு வே.இராமர் அவர்கள் தான் வாழ்ந்த கிராமத்தின் மீது அன்பும் அக்கறையும் கொண்டு அதன் வளர்ச்சியில் தன்னை முழுமையாக இணைத்து செயல்பட்டு ஊர் மக்களால் என்றும் நினைவு கூரப்படும் அளவிற்கு தன் வாழ்வை அமைத்துக் கொண்டிருந்தார்.

அதன் காரணமாக தான் எழுத விரும்பிய நூலை தான் வாழ்ந்த கிராமத்தின் வரலாற்றுப் பதிவாக எழுத நினத்திருந்தார்.

அவர் வாழும் காலத்தில் அந்த நூல் வெளிவராதிருந்தாலும் அவரின் கனவை அவரின் இதயப் பதிவை அவரது பிள்ளைகள் இன்று நூலாக்கி இருக்கிறார்கள்.

இந்த நூலாக்கம் வெறும் அச்சு பிரதியாக நின்று விடுவதில்லை. இது ஒரு காலத்தின் வரலாற்று பதிவாக அமைந்திருக்கிறது.

தான் வாழ்ந்த கிராமத்தின் மீது கொண்ட அன்பினால் அந்த கிராமத்தின் வரலாற்றை, இந்த கிராமத்தினுடைய எழுச்சியை அதன் தொடக்க காலத்தில் இருந்தே இவர் எழுத முயன்றிருக்கிறார்.

கூட்டுறவுச் சங்கத்தின் தோற்றம், சந்தையின் ஆரம்பம், பாடசாலையின் ஆரம்பம் என ஊரின் முக்கியமான கட்டமைப்பு வேலைகள் எல்லாம் எவ்வாறு நடந்தன என்றும், அதில் தான் எத்தகைய பங்களிப்பை வழங்கினார் என்பதையும் மிக அழகாகப் பதிவு செய்திருக்கின்றார்.

வளர்ந்து வருகின்ற ஒரு கிராமம் பல இடர்பாடுகளைக் கடந்து எவ்வாறு முன்னேறி இந்த ஊர் மக்கள் விரும்பி உறையும் ஊராகத் தன்னை கட்டமைத்துக் கொள்கிறார்கள் என்பதற்கு இவரது இந்த நூல் சான்றாக ஆகிறது .

அது மட்டுமின்றி இது இனி வாழும் புதிய இளைஞருக்கும் சமூகத்தில் எவ்வாறு அக்கறையாக இருக்க வேண்டும், சமூக வளர்ச்சியில் எத்தகைய பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பது மட்டுமன்றி அவர் மக்களால் காலம் காலமாக நினைவு கூரத்தக்கதாக தனது வாழ்வை அமைத்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கு இந்த நூல் ஆதாரமாகிறது.

இவர் எனது உறவினர் என்ற வகையில் இந்த நூலுக்கு ஒரு நயவுரையை எழுதுவதில் நான் பெருமை அடைகிறேன்.

ஒரு மனிதனின் வாழ்வு அனைவர்க்கும் என்று ஆகும் போது அது பெருமை உடையதாகவும் காலத்தால் அழியாத நிலைப்பாடு உடையதாகவும் மற்றவர்களால் கொண்டாடப்படத்தக்கதாகவும் ஆகிவிடுகிறது.

ஒரு உதாரண புருசரின் நினைவாக வெளியீடு காண்கின்ற இந்த நூல் ஒரு கிராமத்தின் ஆரம்பக் கதையாக எல்லோரும் கருதலாம். சமூகத்தில் அக்கறையுள்ள ஒவ்வொருவருக்கும் இந்த நூல் ஒரு துணை ஆதாரமாக அல்லது ஊக்க சக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கட்டுரைக்கு வாய்ப்பு அளித்த அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

**டாக்டர் கந்தையா நவரத்தினம்**
நடன முருகன் வைத்திய நிலையம்
இல - 7 கஸ்தூரியார் லேன்
யாழ்ப்பாணம்

# நான் அறிந்த இராமு வாத்தியார்

*எனக்கு இராமு வாத்தியார் மீது அளவு கடந்த மதிப்பும், மரியாதையும், பற்றும், பாசமும் எனை அறிந்த காலத்தில் இருந்தே இருந்தது என்பதை நன்றாக நான் அறிவேன். எனக்கும் அவருக்கும் பல விடயங்கள் ஒற்றுமையாக இருப்பதை எண்ணிப் பார்க்கின்றேன். நானும் அவரும் ஒரே ஊரில் பிறந்தோம். வாத்தியாரின் தாயாரும், எனது தாயாரும் மிக நெருங்கிய இரத்த உறவினர். இருவரும் ஒரே திகதியில் (24) பிறந்தோம். இருவரது முதல் நியமனமும் கண்டி புசல்லாவை சரஸ்வதி வித்தியாலயமாகும். இருவரது திருமண பந்தமும் கொழும்புத்துறையுடன் தொடர்புபட்டதாகும். இருவரது பெயரும் கூட மகாவிஸ்ணுவுடன் தொடர்புபட்டதாகும். கைதடி நாவற்குழி அரசினர் பாடசாலையில் ஒன்றாகக் கற்பித்த காலத்தில் எமது ஊரில் கல்வி, கலை, கலாசார, சமூக அபிவிருத்தி தொடர்பாக ஒரு தளத்தில் நின்று நேர் சிந்தனையோடு செயற்பட்டிருக்கின்றோம். அவ்வகையில் எனக்குத் தெரிந்தவற்றை இந் நூலின் ஊடாகப் பகிர்கின்றேன்.*

**வாத்தியாரும் ஊரும் உறவும்...**

*ஒருவரின் சிறப்பான வாழ்வும் வளமும் அவர் பிறந்த ஊரிலும் உறவிலும் பெரிதும் தங்கியுள்ளது என்பது அனுபவ உண்மை. சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த இருவகை நிலங்களில், வயலும் வயல் சார்ந்த மருத நிலப்பண்புகளும், கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலப்பண்புகளும் ஒருங்கே அமைந்து காணப்படும் கோயிலாக்கண்டி தற்போதைய கைதடி நாவற்குழி தெற்கில் வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனாகப் பிறந்து பெற்றோர்க்குப் பெருமை சேர்த்தார். கோயிலாக்கண்டி என்ற பெயரின் அர்த்தத்தைச் சிறுவயதில் என் தந்தையாரைக் கேட்ட போது அவரின் விடையானது இப்படியாக அமைந்தது. அதாவது கோயில்கள் பலவற்றை உருவாக்கிய தலம் என்பது மிகப் பொருத்தமானதாகவே அமைந்தது. கோயிலும், சுனையும், கடலுடன் சூழ்ந்த கோயிலாக்கண்டி வாத்தியார் பிறந்த ஊர் என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.*

*ஒரு சகோதரன் இரு சகோதரிகளுடன் கூடிப் பிறந்து தம் குடும்பம் குதூகலிக்க மிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். மணவாழ்வில் தன் அருமை மனைவியுடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து தம்மைச்*

சார்ந்தவர்களும் மகிழ்ச்சியாக வாழ நல்ல பல காரியங்களை ஆற்றியுள்ளார். தன் அன்பு மனைவிக்கு ஏற்ற கணவனாய் மற்றவர்கள் பார்த்துப் பின்பற்றி வாழக்கூடியதான வாழ்க்கை அவருக்கே உரியது. சுருக்கமாகச் சொன்னால் இராமாயணத்தின் நாயகன் இராமராகவே வாழ்ந்து காட்டினார். தன் பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த அப்பாவாக வழிகாட்டினார்.

## வாத்தியாரின் கலைத்துவம்

வெள்ளை வேட்டி, வெள்ளைச் சேர்ட் தான் அவரது தேசிய உடை. எனக்கு நினைவு தெரிந்த நாட்களிலிருந்து இவ் வெண்மையான கோலத்தையே கண்டு வந்துள்ளேன். பின்னாளில் அவரது தலைமயிரும் கூட வெள்ளை வெளேரென்று பிரகாசித்தது. அவரது உயர்ந்த உள்ளத்தைப் போல. எண் சோதிடத்தில் ஆறாம் நம்பரைப் பற்றிக் கூறுகையில், கலைகளின் பிறப்பிட இலக்கம் எனக் குறிப்பிட்டுள்ளதைப் போல் நல்ல கலைஞனாக, கலா ரசிகனாக விளங்கினார். பண்ணோடு பதிகங்களைப் பாடும் போது கல்லும் கசிந்து உருகுமாப் போல் உணர்ச்சி வெளிப்பாடு இருக்கும். அவர் குரலோசை இன்னும் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. பாடசாலைக் காலங்களில் நாடகம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம் என்பவற்றை அற்புதமாகத் தயாரித்து மேடையேற்றியுள்ளார். வாத்தியாருடன் இணைந்து பணியாற்றிய காலங்களில் நான் நாடகங்கள் மேடையேற்ற மிகவும் ஒத்தாசை புரிந்தார். நாடகப் போட்டிகளில் எமது பாடசாலை சென்ற இடமெல்லாம் வெற்றிவாகை சூடிவர அவரின் அயராத உழைப்பு பெரும் துணை புரிந்தது. தொல்புரத்தில் வாழ்ந்த நண்பர் “காவடிச் சுப்பர்” எனப்படும் சுப்பிரமணிய வாத்தியாரை அழைத்து வந்து பாடசாலையில் ஹார்மேனிய இசைக்கூடாக காவடிப் பாடல்களைப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவித்தார். இது தொடர்பாக இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்.

## இராமு வாத்தியாரின் சமூகப் பணிகள்

நாடென்ன செய்தது உனக்கு? என்று கேள்விகள் கேட்பது எதற்கு? நீ என்ன செய்தாய் அதற்கு? என நினைத்தால் நன்மை உனக்கு... எனும் திரைப்பாடல் வரிகளின் கருத்துக்கு அமைவாக ஊரின் அபிவிருத்திக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கின்றார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதனைச் சிந்தையில் தாங்கி மக்களுக்காக அளப் பெரும்

சேவைகளைச் செய்து மகிழ்ந்திருக்கின்றார்.

காணுமிடமெல்லாம் கல்லுகள் நாட்டிக் கோயிலாக, கிராமிய வழிபாடாக வழிபட்ட மக்களின் பக்தி மார்க்கத்தில் ஆகம விதிகளை முறைப்படி பின்பற்றி பிராமணர்களின் பூசை வழிபாட்டினைத் தொடங்கிய பெருமை வாத்தியாரையே சாரும். இச் செயற்பாட்டினூடாக அவர் இரண்டு நன்மைகளை எதிர்பார்த்திருந்தார். ஒன்று பெரும்படை அம்மன் என்ற தெய்வத்திற்கு இரண்டு கோயில்கள், பூசைகள் நடப்பதைத் தவிர்ப்பது, இரண்டு பரஸ்பரம் இரண்டு கோயில்களுக்கும் மக்களை வழிபட வைப்பதன் மூலம் பிரிவினையைத் தடுப்பது அல்லது குறைப்பது.
ஆயினும் அவரது நல்ல சிந்தனைகள் கதைகளாய், கற்பனைகளாய் மண்ணோடு மண்ணாகிப் போயின. அதற்காக அவர் பட்ட வேதனைகள் எல்லோருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒரு படித்த மனிதரின் பண்பட்ட செயற்பாடுகள் நிராகரிக்கப்பட்டன. உடைத்து வீசப்பட்டன.

## புத்தகமாக்குவதற்கான எத்தனிப்புக்கள்

வாத்தியாரின் இறுதிக் காலங்களில் தாம் ஊருக்காகச் செய்த சேவைகளைப் புத்தகமாக்க வேண்டும் என்று பெரு விருப்புக் கொண்டார். இது தொடர்பாக என்னோடு கதைத்தார். மிகவும் நல்ல விடயம் சேர், மலர்க் குழு ஒன்றை உருவாக்கி இப்பணியை முன்னெடுப்போம் என்று அவருக்குக் கூறினேன். ஏனெனில் இது ஊர் பற்றியது. பொது விடயமும் கூட... ஆகவே ஊர் இளைஞர்கள், சமூக நிறுவனங்கள், மன்றங்கள் என்பவற்றையும் இணைத்துச் செய்வதே நல்லது என்று தீர்மானித்தோம்.

ஊரில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் மூலம் கட்டுரைகள், கதைகள், இலக்கியம் சார்ந்தவற்றை எழுதித் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நான் ஐந்து புத்தகங்கள் வெளியிட்ட அனுபவத்தைக் கொண்டு, கொழும்புத்துறையைச் சேர்ந்த கோபி என்பவரின் மெகா பிரிண்டேசுக்கு வாத்தியாரை அழைத்துச் சென்றேன். கொழும்புத்துறை சன சமூக நிலையத்தாரால் வெளியிடப்பட்ட "எனது கிராமத்தைப் பற்றிக் கூறும் முதல் நூல்" எனும் தலைப்பிலமைந்த ஆய்வுச்
சஞ்சிகையைக் கோபி வாத்தியாருக்குக் காட்டினார். அதன் தலைப்பு வாத்தியாருக்குப் பிடித்துவிட்டது. அந்தத் தலைப்பையே எமது புத்தகத்திற்கும் வைக்கலாம் எனத் தெரிவித்தமையைத் தொடர்ந்து புத்தகம் அச்சிடும் பணி அன்றே ஆரம்பித்தது.

இப்போது ஊரில் உள்ளவர்களை ஒன்று திரட்டி இச் செயற்பாட்டை முன்னெடுக்கும் யோசனையை வாத்தியார் என்னிடம் ஒப்படைத்தார். நான் சில இளைஞர்களைத் தேடிச் சென்று கதைத்தேன். இது தொடர்பாக ஒரு இளைஞன் தெரிவித்த கருத்தானது:- தான் பணிபுரியும் நிறுவனத்தின் நண்பன், தனது கிராமத்தின் வரலாறு எழுதுவதற்குத் தனது ஊரில் உள்ள விடயமறிந்த பல வயோதிபர்களை ஒன்று திரட்டி அவர்களைப் பேட்டி கண்டு அதை ஒலி, ஒளிப்பதிவு செய்து தான் எழுதி முடித்ததாகவும், அப்படியான செயற்பாடு பொருத்தமானது என்றும் தெரிவித்தார். அவர் கூற்றை நாம் மறுக்கவில்லை. இன்னொரு இளைஞன் புத்தகம் அச்சிடக் காசுக்கான வழி என்ன என்று வினவ, நானும் வாத்தியார் நிதி தொடர்பாக எனக்குச் சொன்னதைச் சொன்னேன். அதாவது ஒரு லட்சம் ரூபா வாத்தியார் தருவார். மீதி ஐம்பதனாயிரம் ஊர் இளைஞர் நாம் செலுத்துவோம், என்பதை அவர்கள் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. தமக்கு வசதியில்லை என்றெல்லாம் கூறியதோடு பின்னர் அவர்களைச் சந்திப்பதிலும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந்த இழுபறி நிலைமைக்குள் என்னையும் வாத்தியாரையும் முடிச்சுப்போட்டு முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கதைகள் அவிழ்த்து விடப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் தான் வாத்தியார் இறைவனடி சேர்ந்தார். இருப்பினும் அவரின் கனவுகள் மெய்ப்பட வேண்டும். எப்படியோ அவர் ஆரம்பித்த புத்தக வெளியீடு இடம்பெற வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அமைகின்றேன்.

**க.இ.கமலநாதன்**
ஓய்வு நிலை விரிவுரையாளர்

# யா/கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையும் அதிபர் திரு.வே.இராமர் அவர்களும் - சில நினைவுகள்

*யா/கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை தென்மராட்சி கல்வி வலயத்தில் முன்னிலையில் உள்ள வகை II பாடசாலையாகும். இப்பாடசாலை மாணவர்கள் 1997ம் ஆண்டிலிருந்து க.பொ.த(சா.தரம்) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுத் தொடர்ந்து உயர்தரக்கல்வி, பல்கலைக்கழகக் கல்வி பெற்று பட்டதாரிகளாக வெளியேறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கான காரணமாக இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களையும், ஆசிரியர்களையும் குறிப்பிடலாம். இப்பாடசாலை கஷ்டப்பிரதேசப் பாடசாலையாக இருப்பதால் இங்கு வரும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கற்பித்தார்கள்.*

*இப்பாடசாலையின் அதிபராக இக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒருவர் சேவையாற்றியிருக்கின்றார் என்றால், அது திரு.வே. இராமர் மாஸ்டரே ஆகும். அவர் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட 1960ம் ஆண்டையடுத்து தொண்டர் ஆசிரியராக கடமையாற்றிப் பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆனார். நீண்ட காலத்தின் பின்னர் 1984இல் தனது கிராமப் பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்றார். திரு வே.இராமர் அதிபர் அவர்கள் ஏறத்தாழ 12 ஆண்டுகள் போர்க்கால சூழலிற் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் பாடசாலை நிர்வாகத்திற் கொத்தணி முறை நடைமுறையில் இருந்தது. அப்பொழுது கைதடிக் கொத்தணியில் ஓர் உறுப்பினராக யா/கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை விளங்கியது. கொத்தணி அதிபராக இருந்த திரு.சோ.கணேசலிங்கம் அவர்கள் தனது கொத்தணியில் இருந்த பத்துப் பாடசாலை அதிபர்களுடனும் நல்லுறவைப் பேணியதில் திரு.வே.இராமர் அதிபர் முக்கியமானவராவார். அப்பொழுது யான் மூவாதாரப்பாடசாலையாக விளங்கிய யா/ கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் ஓர் ஆசிரியராக கடமையாற்றியபடியால் அறிவேன். ஏனெனிற் கொத்தணி அதிபர் திரு.சோ.கணேசலிங்கம் அவர்களுடன் ஒரு கூட்டமாக அவரது வீட்டில் நடந்த வைபவமொன்றிற் கலந்து கொண்டமை இன்றும் எனது நினைவில் உள்ளது.*

*பின்னர் 01.02.1993 இல் யான் யா/நாவற்குழி மகாவித்தியாலய*

*அதிபராக நியமனம் பெற்றேன். இதனால் திரு.வே.இராமர் அவர்கள் எனது அயற் பாடசாலை அதிபராகவிருந்தார். இவரது பாடசாலையில் அப்பொழுது தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை வகுப்புக்கள் இருந்தன. தரம் 9 பூர்த்தி செய்த அவரது பாடசாலை மாணவர்கள் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கே வருவார்கள். அம் மாணவர்கள் க.பொ.த (சா.தரம்) பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுத் தருவார்கள். திரு.வே.இராமர் அவர்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் தரம் 11 வரை வகுப்புக்களை ஆரம்பித்து அப்பாடசாலையை வகை II பாடசாலையாக மாற்றிய பெருமை அவரையே சாரும். இவ்வாறாகப் பாடசாலையைத் தரம் உயர்த்திக் கொண்டிருந்த வேளை யாழ்ப்பாண மாவட்டம் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த பொழுது, அவர் தனது குடும்பப் பாதுகாப்புக் கருதி வன்னிப்பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்தார்.*

*அக்காலங்களில் ஒரு பாடசாலையின் அதிபரே இக்கிராமத்தின் தலைவராகவும் இருப்பார். அந்த வகையில் திரு.வே.இராமர் அவர்கள் தனது கிராமத்தில் இருந்த மகாவிஸ்ணு ஆலயத்தின் முகாமைத்துவத்தின் பங்காளியாக இருந்தார். அத்தோடு கிராமத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் உருவாக்கத்திற்கு ஏனையவர்களோடு சேர்ந்து பாடுபட்டார். இவர் ஆத்மீகத் தேடுதலில் ஈடுபடுபவர். வடக்கு, கிழக்கு மாகணங்களில் உள்ள சக்தி ஆலயங்களை நன்கறிந்தவர். கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு எனும் கிராமத்தில் திரௌபதை அம்மன் எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயம் உள்ளது. அவ்வாலயம் பற்றி, தனது ஆய்வுக் கட்டுரையொன்றிலே திரு.வே.இராமர் மாஸ்டர் அவர்கள் அழகாகக் குறிப்பிடுகின்றார். இவ்வாறாக நல்ல அதிபராக, சமூக சேவையாளராக, ஆத்மீகவாதியாக வாழ்ந்து மறைந்த இராமு மாஸ்டரை நினைவு கூருவதில் பெருமையடைகின்றேன்.*

*ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!*

**திரு. பி. முத்துலிங்கம்**
*ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்*

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும்




எமது கிராமமாகிய கைதடி நாவற்குழி தெற்கு நல் ஆசான் அதிபர் மதிப்பிற்குரிய வேலுப்பிள்ளை இராமர் ஐயா அவர்கள் ஆசிரியராக, அதிபராக, சமூக செயற்பாட்டாளராக திகழ்ந்தவர். நான் அறிந்த காலத்தில் இருந்து வெள்ளை நிற வேட்டியும், வெள்ளை நிற சேட்டும் அணிந்து கொள்வார். அவரது நடையில் மிடுக்கிருக்கும். நேரிய சிந்தனையாளராக அவரை நான் கண்டு கொண்டேன். நான் இக்கிராமத்தில் வசிக்கத் தொடங்கிய காலம் தொடக்கம், இடம் பெயர்ந்த காலம் வரை, எமது கிராமத்திலுள்ள சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து, சமூக செயல்பாடுகளில் என்னையும் இணைத்து, சமூக செயற்பாடுகளில் களம் இறக்கிய பெருமை மதிப்பிற்குரிய அதிபர் அவர்களையே சாரும். கிராம நலன் விரும்பிகளுடன், நானும், அதிபர் அவர்கள் தலைமையில் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் வெற்றியினைத் தந்துள்ளன. குறிப்பாகச் சொல்லப்போனால் எமது கிராமத்திற்கு

.

*மின்சாரம் கிடைப்பதற்கு அதிபர் அவர்களின் வழிகாட்டுதலில் எமது சமூக செயற்பாட்டாளர்களின் உதவியுடன் செயற்பட்ட காலத்தில் அதனை கிடைக்கவிடாமல் பலவழிகளிலும் தடைசெய்யப் பார்த்தனர். ஆனால் அதிபர் அவர்களின் அயராத உழைப்பினாலும் எமது மக்களின் ஒத்துழைப்பினாலும் மின்சாரம் கிடைத்தது. கிராம மக்கள் அனைவரும் மகிழ்வடைந்தோம். அதிபர் அவர்கள் எப்படிப்பட்ட மேலதிகாரிகள் என்றாலும், பேசி வாதிடும் தன்மையுள்ளவர். எமது பக்கம் நியாயம் உள்ளது என்றால் எதற்கும் எவருக்கும் பயப்பட மாட்டார். எமது கிராம மக்களை நல்வழிப்படுத்துவதில் மிகவும் அக்கறை உடையவர். இவை அவருடன் பயணித்த காலத்தில் நான் அறிந்து கொண்டது. அதிபர் அவர்களை எமது பெரியோர்கள், சிறியோர்கள் அனைவரும் இராமு வாத்தியார் என்று செல்லமாக அழைப்பார்கள். அவரது காலத்தில் படித்தவர்கள் பல்வேறு துறைகளிலும் கல்விமான்களாகவும் திகழ்கின்றனர் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அதிபர் அவர்கள் என்னை தன்னுடன் இணைத்துக் கொண்டது எனக்கு கிடைத்த வரப்பிரசாதமாக எண்ணுகின்றேன். அவரின் செயற்பாடுகள் அனைத்தும் எமது கிராம மக்களின் மனதிற் பதியப்பட்டவையாகும். அதிபர் அவர்கள் எமது கிராம மக்களின் மனதில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார் என்பது உண்மையாகும்.*

*நன்றி*
*இராமர் நாமம் என்றும் வாழ்க*
*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

*என்றும் அதிபரின் அன்பானவன்*
**ஐ.தனஞ்செயன்**
வேலணை தெற்கு
வேலணை - *6*

# இராமு Sir
# கிராமத்தின் வரலாற்று நூலிற்கான வாழ்த்துரை

**"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"**

*ஆம் மகனாகிய மோகன் அவர்கள் தனது தந்தையாகிய இராமு சேர் அவர்களுக்காக, அவருடைய கனவுகளை நனவாக்கும் பொருட்டு எடுத்திருக்கும் முயற்சியில் நூல்வடிவம் பெறுகின்றது வரலாற்று ஆவணம் ஒன்று. அதுதான் இராமு* sir *என்ற நூல். இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதற்கும் எனக்கும் தொடர்புண்டு.*

*1978ம் ஆண்டு 06ம் மாதம் 8ம் திகதி தொடக்கம் 1984ம் ஆண்டு தை மாதம் வரை கைதடி நாவற்குழி கிராம மக்களுடன் ஏற்பட்ட தொடர்பு இன்று வரை நீடித்து நிலைத்து நிற்கின்றது. பல கல்விமான்களை உருவாக்கிய, உருவாக்கிக் கொண்டிருக்கின்ற கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையில் தான் எனது ஆசிரியப்பணி தொடங்கியது. அன்று தொடக்கம் இன்று வரை இராமு* sir *இன் தொடர்பும் இருக்கின்றது. பாடசாலைக்கு நியமனம் பெற்றுச் சென்றவேளை இராமு* sir *இன் கையெழுத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தமையை அங்குள்ள சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் அவதானித்தேன். பொதுவிடயங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய மக்கள் கூட்டம் அங்கே இருப்பதை அவதானித்தேன். இராமு* sir *அவர்களின் பிள்ளைகள் எங்களிடம் கல்வி கற்றார்கள். தந்தையைப் போன்று பண்புள்ளவர்களாகவும், விவேகமுள்ளவர்களாகவும் காணப்பட்டனர். நான் ஆசிரியராகக் கடமையாற்றிய வேளை தற்போது கல்வியற் கல்லூரியின் ஓய்வு நிலை விரிவுரையாளராக இருக்கின்ற திரு இ.கமலநாதன் அவர்களும் தொண்டர் ஆசிரியராகச் சேவையாற்றிக் கொண்டிருந்தார். இராமு* sir *அவர்கள் வெளிமாவட்டத்தில் கடமையில் இருந்தபோதும் அடிக்கடி பாடசாலைக்கு வருகை தந்து தன்னால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாடசாலையின் வளர்ச்சி பற்றிக் கலந்துரையாடிச் செல்வார். கைதடி நாவற்குழி தெற்கு கிராமத்தின் வளர்ச்சியில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களை குறிப்பிட்டுச் செல்வார். நான் 1984 இல் பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றவேளை எனது பதில் அதிபர் கடமைகளை இராமு* sir *அவர்களே பொறுப்பேற்றுக் கொண்டார். அதிபராகக் கடமையேற்ற*

அவர் சிறப்பான பணிகளை மேற்கொண்டார்.

ஓய்வு பெற்ற போதும் தனது கிராமம் என்ற உணர்வு அவரிடம் மேலோங்கி இருந்தது. கிராமத்தின் வரலாற்றை எழுதி இளம் சந்ததிக்கு கொடுக்க வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் காணப்பட்ட அவர் "கந்தையா கனகம்மா" நிதிய காப்பாளர் திரு.க.மயில்வாகனம் ஐயாவுடனும், என்னுடனும் விரிவுரையாளர் கமலநாதனுடனும், அதிபர் திரு.பி.முத்துலிங்கம் அவர்களுடனும் தொடர்புகளை மேற்கொண்டிருந்தார். அவரின் திடீர் மறைவால் அவர் பணி தடைப்பட்டது. அந்த நேரத்திற் தான் நான் நோர்வே சென்றவேளை அவருடைய மகன் மோகன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. மோகன் அவர்கள் தந்தையின் பணியைத் தொடர விருப்பம் தெரிவித்தார். இது இராமு sir செய்த பெரும் பாக்கியம். இதன் பயனாக இந்நூல் இன்று வெளிவருகின்றது. இதற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எண்ணங்கள் உயர்வானால் அது இறையருளால் நிறைவேறும். தந்தையின் அவாவை நிறைவேற்றி வைக்கும் அவர் தம் அன்பு மகன் மோகனும், அவருடைய அன்புக் குடும்பமும் வாழ்க வளமுடன் என்று வாழ்த்துவதோடு இராமு sir அவர்களின் எண்ணம் ஈடேறுவதன் மூலம், அவரின் தூய ஆன்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வையகம் வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

**திருமதி வசந்தாதேவி மேகலிங்கம்**
ஓய்வுநிலை அதிபர்

# இராமருக்கு ஒப்பானவரே இராமர்



*அமரர் வே.இராமர் அவர் காலமான செய்தி பேரதிர்ச்சியாக இருந்தது. அவரோடு நான் கொண்ட அன்பு இன்றும் மறக்க முடியாத பேரன்பு. யாழ்ப்பாணம் கைதடி நாவற்குழி பிரதேசத்திற் பிறந்து கல்வியில் உயர்ந்து கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை அதிபராகவும் 1996ம் ஆண்டு இடப்பெயர்வின் பின் வன்னிப்பெருநிலப்பரப்பின் பாடசாலை ஒன்றில் அதிபராகவும் இருந்து, அரச பணிதனில் தோளோடு தோள் நின்று உழைத்து, நிரப்ப முடியாத வெற்றிடமாக நீங்கள் புகழோடு நிறைவாக வாழ்ந்து நீங்கிச் சென்றீர்கள்.*

*அந்நாளிலிருந்து ஓராண்டு நிறைவு பெற்று இந்நாளில் தம்முடைய நினைவை பகிர்வதில் பெருநிறைவடைகிறேன். நல்ல உடல் உள ஆரோக்கியமான நிலையில் காண்போரை எல்லாம் புன்சிரிப்போடு வரவேற்று உரையாடும் நல்மனம் கொண்ட அன்னாரது மரணம் ஏற்றுக் கொள்ள முடியாததாகக் கவலை நிறைந்ததாக அமைந்தது.*

*சிறிய வயதிலிருந்தே நன்கு பழக்கப்பட்டவராக வாழ்ந்தபோதிலும்,*

*1995ம் ஆண்டு கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலைக்கு ஆசிரியராக நான் சென்ற போது இவர் தொடர்பாக முழுமையாக அறிந்து கொண்டேன். என்னுடைய இன்றைய உயர்ச்சிக்கு முக்கிய காரணியாக இருந்தவர். ஓய்வு பெற்ற பின்னரும் கூட இவரது வழிகாட்டல் தொலைபேசி மூலமும் கடிதம் மூலமும் தொடர்ந்தது.*

*அது மட்டுமன்றி போக்குவரத்துச் சுமூக நிலையை அடைந்த பின்னரும் கூட யாழ்ப்பாணம் வருகை தருகின்ற போது எனது இல்லத்திலும், எனது கல்லூரியிலும் என்னைச் சந்தித்துச் செல்லும் வழக்கத்தையும் கொண்டவர். அவர் தன்னுடைய பிள்ளைகளைப் பல கஷ்டங்களின் மத்தியிலும் கல்வியில், தொழிலில் நன்னிலைக்கு வருவதற்காகப் பெரும்பாடு பட்டவர். இவர் கலைத்துறையிலும் நாடகத்துறையிலும் சிறந்த ஒரு கலைஞனாகக் காணப்பட்டதுடன், சைவ சமயத்தில் அதிகம் பற்றுக் கொண்டவராகவும், கண்ணன் மீது அதீத பக்தி கொண்டவராகவும் காணப்பட்டார். கைதடி நாவற்குழி பிரதேசத்தில் எட்டாம் வகுப்பு வரை இருந்த பாடசாலையை கா.பொ.த (சா/த) தரம் வரை உயர்த்தி அப்பிரதேசத்தினுடைய கல்வி எழுச்சிக்காகத் தன்னாலான பணிகளைச் செய்து சிறந்த கல்விச் சமூகத்தினைத் தோற்றுவித்தவர்.*

*அவரது இறுதி ஆசையாகக் காணப்பட்ட கைதடி நாவற்குழி தெற்கு கிராமத்தின் வரலாற்றுத் தொகுப்பு நூலினை அனைத்து ஏற்பாடுகளும் செய்து வெளியீடு செய்ய முன்னர் அவருடைய பிரிவு நிகழ்ந்து விட்டது.*

*தன் வாழ்க்கைக் காலத்தில் தன்னைப் பிறருக்காக அர்ப்பணித்துத் தன் பிரதேசம் எழுச்சி காண அயராது உழைத்து, அந்த எழுச்சியில் மகிழ்ச்சி கண்டு வாழ்ந்த அன்னாரின் இழப்பு பேரிழப்பாகும். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற தெய்வப் புலவர் வாக்குப் போல, இந்த உலகில் நற்பணிகள் பல செய்து வாழ்ந்த அன்னாரின் ஆன்மா இறைவன் பாதார விந்தங்களில் சாந்தி பெறும் என்பதில் ஐயமில்லை.*

**செ.பேரின்பநாதன்**
*அதிபர்*
*யா/டிறிபேக் கல்லூரி*
*சாவகச்சேரி*

# எனது பார்வையில் எமது பாடசாலை

*மருதமும் நெய்தலும் ஒரு சேர விளங்கும் கோயிலாக்கண்டியைப் படிப்புலகம் தலை நிமிர்ந்து நிற்க வைத்த, கைதடி - நாவற்குழி தெற்கு அ.த.க பாடசாலை எனது முதல் நியமனப் பாடசாலை. எங்கெங்கோ சிங்கள தேசமெல்லாம் தமிழ் முஸ்லீம் மக்களை அழைத்துச் சேவை முன்பயிற்சி பெற்றபின், கடுமையான போராட்டச் சூழலில் ஏழு மைல் தூரம் மிதிவண்டியை உழக்கி எனது பாடசாலையை நான் அடைந்த போது "வா" என்று 1988 இல் என்னை வரவேற்றவர்கள் மூவர். அதிபர் வே.இராமர், இ.செ.பத்தநாதன், இ. சொக்கலிங்கம். அன்றிலிருந்து இன்று வரை எனது ஆசிரிய வாழ்க்கையில் முப்பத்திநான்கு வருடங்களாக நான் கண்டு, கேட்டு அனுபவித்த சம்பவங்களில் மிகச் சிலவற்றை இந்த நூலின் மூலமாகத் தங்களுக்குப் படையல் செய்கின்றேன். அத்துடன் நேர்மையான வாழ்வின் பயனைக் கண்ணெதிரே கண்டு ஆறு பிள்ளைச் செல்வங்களுக்குத் தந்தையாகி பெரும்படை அம்மனின் வாசலை எனது புகுந்த இடமாகக் கொண்டு நான் தேடிய நிம்மதி நிலையை எட்ட பாலப்பருவத்திலிருந்தே "நேர்மையாக வாழுங்கள்" என்று உங்களை வேண்டுகின்றேன்.*

*மூன்றரை வருட பாடசாலைப் பணியின் பின் பலாலி ஆசிரியர் பாடசாலைக்குச் சென்றபோது அங்கு ஆர்.எஸ்.நடராஜா அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்கு 1992-1993 பயிற்சிக் காலம் முடிய நான் மீண்டும் பழைய பாடசாலைக்கு திருப்பி அனுப்பப்பட்டேன். இடப்பெயர்வுகள், பொருள் நஷ்டம், உயிர் நட்டம் நிறைந்த போராட்டக் காலங்களிலெல்லாம் எனக்குக் கைகொடுத்தது இந்தப் பாடசாலையே. அவ்வாறிருந்து 2004 பிறந்தபோது நான் சாவகச்சேரி றோ.க.த.க. இல் பணிபுரிய ஆரம்பித்தேன். இனியும் எப்போதும் எனது தாய்ப்பாடசாலையே என் மனதில் நிற்கும்.*

*புது வருடம் பிறந்தால் மாணவர்கள் அடுத்த (மேல்) வகுப்பில் இணைந்து 2 வாரம் தான் படிப்பு நடக்கும். அதன் பின் விளையாட்டுப் போட்டிப் பயிற்சிகள். தமது வெள்ளைச் சீருடையை விடுத்து வண்ணத்திப் பூச்சிகள் போல விதம் விதமான ஆடைகள் அணிந்து ஓடுதல் பாய்தல் கயிறு அடித்தல் என்பன முடிய, மூவர்ண அலங்காரங்கள் மிளிர அணிநடை, பெற்றோர் பழைய மாணவர் பார்த்து மகிழ சாவகச்சேரி கோட்ட*

அதிகாரிகள் அதிபர்கள் வருகை தர இனிய கண்காட்சிகள்.

புரட்டாதியில் வரும் நவராத்திரியிலும் கலை இலக்கியப் போட்டிகள், கோலம் போடுதல், மாலை கட்டுதல் என மறக்க முடியாத நிகழச்சிகள். சங்கீதமும் கலையும், நாடகமும் எமது பாடசாலைச் சமூகத்தின் பாரம்பரிய நயங்கள். அதிபர் வே.இராமர் காலத்தில் கொத்தணி கோட்ட மட்ட நிகழ்வுகளைத் தாண்டி மாவட்ட மட்ட வெற்றிகளைப் பெற்றார்கள் எமது மாணவர்கள். ஆசிரியர் தினத்தில் க.இ.கமலநாதனின் (தற்போதைய ஓய்வு நிலை கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர்) நெறியாள்கையில் மேடையேறிய "கூடாத வாத்தியார்" நாடகம் என்னை நல்ல வாத்தியார் ஆக்கியது. அந்த நாடகம் கொத்தணி (கைதடி) கோட்டம் நிகழ்வுகளில் கலந்து (நடந்து) சோபித்தது.

உப அதிபர் இ.சொக்கலிங்கம் (ஆங்கில ஆசிரியர்) மன விருப்பப் பிரேரணையின் கீழ் சேர, சோழ, பாண்டியர் இல்லங்கள் மாறுபட்டு நாவலர், விபுலானந்தர், பண்டிதமணி என மாற்றமடைந்தது. என்றும் வண்ணம் மாறாத தூய வெள்ளை உடை அணிந்த சி.செ.பத்மநாதன் கணித பாடத்தில் மாணவர்களை முன்னேற்றி வைத்த பெருமகன். எழுத விரும்பியதில் என் நினைவுகளுக்கு அளவேயில்லை. இச் சஞ்சிகையில் இவற்றை வாசிக்கும் வாசகர்களுக்கு இவை போதுமெனக் கருதி நிறைவு பெற்று நிம்மதியடைகின்றேன்.

**சி.ஜெயகணேஷன்**
ஆசிரியர்

# இராமர் அவர்களைப் பற்றி ஓர் குறிப்பு



ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள தென்னஞ்சோலைகளும் வயல்கள் நிறைந்ததும், தெற்குப் பக்கமாக கடற்கரையும் தன்னகத்தே கொண்டதும், மேற்குப் பக்கமாக அருளை வழங்கும் கண்ணகை அம்மனும், கிழக்குப் பக்கமாக கருணையை அள்ளி வழங்கும் காத்தற் கடவுளாம் கண்ணனும், தான் தோன்றியாக விளங்கும் பெரும்படை அம்மனும், வைரவர் ஆலயங்களும் நிறைந்த கைதடி நாவற்குழி எனும் அழகிய கிராமமதில் ஸ்ரீமான் ஆண்டி வேலுப்பிள்ளையும் மனைவி (சின்னத்தம்பி) சின்னப்பிள்ளையும் செய்த தவத்தின் பயனாக நான்கு பிள்ளைகளில் இளைய மகன் சுந்தரவதனன் இராமர் என்னும் நாமத்துடன் வந்துதித்தனன். 24.04.1940 இவரது பிறந்த திகதி. இளமைப் பருவத்தில் சகோதரங்களுடன் கூடிக் குலாவி வரும் வேளையில் ஆரம்பக் கல்வியை கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திலும், மறவன்புலோ சகலகலாவல்லியிலும், கைதடி G.M.S ஆங்கில பாடசாலையிலும் தொடர்ந்து சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் பயின்றார். பின்னர் நல்லூரில் உள்ள ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறிய தருணத்தில் தகப்பனை இழந்து தாயின் அரவணைப்பில் வளர்ந்தார்.

சிலரின் எதிர்ப்புக்கு மத்தியில் பாடசாலை ஆரம்பிக்கும் பணி தொடங்கி முயற்சியும் கைகூடி பின்னர் அரச அங்கீகாரம் பெற்றது. தனது ஆசிரியப் பணியை ஆசிரிய மாணவனாக கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையில் ஆரம்பித்தார். வாலிப வயதை எட்டியதும் அண்ணன் பொன்னம்பலமும், நடராசா கதிரமலையும் இணைந்து கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்லையா தம்பதிகளின் புதல்வி

பரமேஸ்வரியைத் திருமணம் செய்து வைத்தனர், தொடர்ந்து ஆசிரியராக பதவி ஏற்ற பின்னர் வெளி மாவட்டத்திலுள்ள கண்டி புசல்லாவை மகாவித்தியாலயத்திலும், மன்னார் கள்ளியடி அ.த.க பாடசாலையிலும் உதவி அதிபருமாக பணியாற்றி வந்தார். பின்னர் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் உதவி அதிபராக இருந்த வேளை கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலைக்கு அதிபராக பதவி உயர்வு பெற்று வந்து கடமையாற்றிய வேளை, நாட்டில் வன்செயல் காரணமாக இடம்பெயர்வுக்குள்ளாகி குடும்பத்துடன் கிளிநொச்சியில் குடியேறினார்.

கிராமத்தில் இருந்தவேளை சனசமூக நிலையம், கிராம முன்னேற்ற சங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கடற்றொழில் கூட்டுறவுச்சங்கம் என்பவற்றில் அதிக ஈடுபாடு கொண்டு செயலாற்றியுள்ளார். இக்கிராமத்தில் ஆலயத்துக்கு 1985 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஸ்ரீமகாவிஷ்ணு பெரும்படை ஆலயம் என்னும் பெயரிட்டு திறம்பட நடாத்தி வந்தார். கிராமத்துக்கு மின்சார வசதி பெறுவதற்கு தனஞ் செயனுடன் சேர்ந்து கருமமாற்றி மின்சாரத்தை பெற்றுக் கொடுத்தார். ஆண்டு 5 வரை இருந்த எமது பாடசாலையை ஆண்டு 8 வரை தரமுயர்த்தி பின்னர் ஆண்டு 11 வரை தரமுயர்த்த முன்னின்று உழைத்தார். அக் காலகட்டத்தில் மூத்த சகோதரன் பொன்னம்பலம் பக்கபலமாக சகலவழிகளிலும் உறுதுணையாய் இருந்து உதவி செய்தார்.

இவருக்கு நான்கு பெண்களும் இரண்டு ஆண்களுமாக ஆறு பிள்ளைகள் வந்துதித்தனர். 1996ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் பாடசாலை அபிவிருத்தி, சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், கிராமத்தின் அனைத்து நிர்வாகத்திலும் பணியாற்றி அளப் பெருஞ்சாதனையை நிலை நாட்டினார், ஸ்ரீமகாவிஷ்ணு பெரும்படை ஆலயத்தின் நிர்வாகியாக இருந்து இறுதிவரை ஆலயத் தொண்டே உயிர் மூச்சென காலத்தை நகர்த்தி தேவார பாராயணங்களை ஓதி திருக்கல்யாண ஊஞ்சற்பாட்டை இயற்றி பாடியும் வந்தார். இறுதியில் 2023 இரண்டாம் மாதம் எட்டாம் திகதி திருதியை திதியில் நல்லான் இராமர் இறைபதம் அடைந்தார்.

**இ.கந்தசாமி**
கைதடி நாவற்குழி தெற்கு


கிளிநொச்சி மாவட்ட அரசசேவை மூத்த ஓய்வூதியர்கள் நன்மதிப்பு விழா – 2016





# எமது கிராமத்தின் வரலாறு

எழில் மிகுந்த இலங்கை மாதாவின் வடபகுதியின் பிரதான நகரம் யாழ்ப்பாணம். இம் மாவட்டத்தின் தெற்குப் பகுதியாக அமைந்துள்ள சாவகச்சேரி தொகுதியைக் கொண்ட பகுதி தென்மராட்சியாகும். தென்மராட்சியின் தென் மேற்குப் பகுதியில் சுமார் 6 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள அழகிய கிராமம் கைதடி நாவற்குழி தெற்குப் பகுதியாகும். இதன் எல்லைகளாக கிழக்குப் பகுதி தென்னஞ்சோலைகளாலும் மறவன்புலோ மேற்கும், தெற்கு கடலாலும், மேற்கு தென்னஞ் சோலையும் பனைவளமும் கொண்டதாகவும் இயற்கை எழில் கொண்ட பசுமை நிறைந்த பகுதிகளாகவும் அமைந்துள்ளன.

இக் கிராமம் கைதடி நாவற்குழி தெற்காக இருந்தாலும் கோவிலாக்கண்டி என்றால் தான் அநேகருக்கு தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. கைதடி நாவற்குழி தெற்கு மக்கள் அநேக காலமும் தாமும் தன்பாடும் என்ற நிலையில் சந்தோசமாகவும் அமைதியாகவும் எந்தவிதமான கோபதாபம் பிணக்குகளின்றி வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஆதிமுதல் "பெரும்படை" என்னும் தெய்வத்தையே தமது குலதெய்வமாக வழிபட்டு வந்தனர். வழமையாக வருடாந்தம் பங்குனி மாதம் கொண்டாடப்படும் பெரும் பொங்கல் தினத்தையே பெருவிழாவாகக் கொண்டாடி வந்தனர். ஒரே சமூகமாக இருந்து சிறப்பாக வாழ்ந்த இவர்களைப் பிரிக்க வேண்டுமென்ற சிலரின் தீய எண்ணத்தாலோ ஏதோ ஒரு காரணத்தாலோ ஒரு பொங்கல் தினத்தன்று இவர்களுக்கிடையே

பிரச்சனைகளும், மனஸ்தாபங்களும், குரோதங்களும் ஏற்பட்டு இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதியினர் தமக்கொன அதே பெயரில் இன்னொரு "பெரும்படை" என்னும் கோயில் அமைத்து வழிபடத் தொடங்கினர். அன்று தொடங்கிய பகை நீண்ட காலம் வேண்டத்தகாத சண்டை சச்சரவுகளையும் போட்டி பொறமைகளையும் இவர்களுக்கிடையே வளர்த்தது. இது இவர்களுக்கு ஒரு சாபக்கேடாக அமைந்து இவர்களின் சீரான வாழ்வைச் சீரழித்தது.



இம் மக்கள் கடற்கரையையண்டி வாழ்ந்தபடியால் கடல்படு திரவியம் தேடும் தொழிலே பிரதான தொழிலாக அமைந்துள்ளது. குறிப்பிட்ட சிலர் விவசாயத்தையும் தம் தொழிலாகக் கொண்டனர். அக்காலம் போதிய போக்குவரத்து வசதி இன்மையால் தாம் பெற்ற சரக்கைத் தனங்கிளப்பிற்கு நேரேயுள்ள கடற்கரையிலிருந்து காவுதடி கொண்டு சாவகச்சேரிச் சந்தையில் விற்றுப் பணமாக்கினர். இந்த நிலை வீண் சிரமத்தையும் கஷ்டத்தையும் கொடுத்ததைக் கண்டு ஒரு சில பெரியவர்களினதும் நல்ல உள்ள கொண்டவர்களது மன எண்ணத்தின்படியும் தம் கடற்கரையிலே தாம் பிடித்த சரக்கை விற்பனை செய்து சம்பாதிப்பதற்கான

ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

## கூட்டுறவுச் சங்கம் உதயம்

இம்மக்களை ஒன்றுபடுத்தி இவர்களது வாழ்வைச் சிறப்புறச் செய்யவும் வீணான குரோதங்களை இல்லாமற் செய்யும் நோக்கத்திற்கும் ஒரு ஸ்தாபனம் தேவைப்பட்டது. அதன் நிமித்தம் கூட்டுறவுச் சங்கம் உதயமானது. அதன் தலைவராக தச்சன்தோப்பைச் சேர்ந்த அறிவு மிக்க திருவாளர் முருகேசு காசிப்பிள்ளையும், செயலாளராக திரு கனகர் சதாசிவம், பொருளாளராக திரு வேலுப்பிள்ளை பொன்னம்பலம் ஏனைய சிலர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர். இந்நிகழ்வு 1951ஆம் ஆண்டு நிகழ்ந்துள்ளது.

## சந்தை ஆரம்பம்

கைதடி நாவற்குழி தெற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சந்தையைச் செயற்படுத்தும் நோக்கத்தோடு கடற்கரையோரம் சிறு கொட்டிலை அமைத்தது. நல்ல நாளாக சித்திரைப் பரணி தினத்தன்று வியாபாரம் தொடங்கத் தீர்மானித்தனர். இதனை விளம்பரப்படுத்தும் வகையில் பல ஊர்களுக்கும், மக்களுக்கும் தெரியப்படுத்தினர். அன்றைய தினம் தொடக்கத்தில் குறைவான எண்ணிக்கையுள்ளோர் சமூகம் கொடுத்து மீன் வகைகளைக் கொள்வனவு செய்தாலும் நாளடைவில் — காலப்போக்கில் மக்கள் அநேகம் பேர் கூடவும் வியாபரம் பெருகவும் வழி உண்டாயிற்று. வியாபாரத்தைக் கண்காணிக்க மகேசனும், சிப்பந்தியாக திரு.வி.சின்னத்துரையும் நியமிக்கப் பெற்றனர். சிப்பந்தி நகைச்சுவையாக "காத்தடி கொண்டு காவினதெல்லாம் அந்தக்காலம், இப்போ கையிலே தூக்கி கரையிலை வைப்பது இந்தக் காலம்" எனக் கவிதையும் யாத்துப்பாடியது இப்போதும் காதில் கேட்கின்றது.

## கூட்டுறவுச் சங்கத்தின் சேவை

கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதும் ஆரம்பத்திற் குறிப்பிட்ட ஒரு தொகையினர் அங்கத்துவராகச் சேரப் பின்னடித்தாலும், ஏனையவர்களோடு சங்கம் வளர்ச்சியடையத் தொடங்கியது. சங்கத்திற்கு ஒரு பெயர் வைப்பதற்காக பூசாரி க.சதாசிவம் பூசை

செய்யும் வைரவர் கோயில் முன்றலில் நடந்த பொதுக்கூட்டத்தில் கடற்றொழில் இலாகாவைச் சேர்ந்த திரு சோமசுந்தரம் என்னும் உயர் அதிகாரியால் "ஸ்ரீ மகாவிஷ்ணு கடற் தொழில் கூட்டுறவுச் சங்கம்" என்னும் பெயர் மொழியப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சங்கம் வளர்ச்சியடைந்து அங்கத்துவர்களுக்கு கடன் வசதி, வலை, கம்பு, வள்ளம் போன்ற உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்தது. இதனைக் கண்ட ஏனையோரும் அங்கத்துவர்களாகச் சேரத் தொடங்கினர்.

## கடற்கரை வீதி வரலாறு

கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கடற்கரை மைதானத்தில் 1952ஆம் ஆண்டு நடைபெற்றது. அக் கூட்டத்திற்கு அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு வே.குமாரசாமி அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். கோவிலாக்கண்டி சந்தியில் இருந்து கடற்கரை வரையான பாதை மோட்டார் வாகனமன்றி துவிச்சக்கர வண்டி கூட செல்ல முடியாதளவு பெரும் மண் தரையாக இருந்தபடியால் பாராளுமன்ற உறுப்பினர் தமது மோட்டார் வாகனத்தை திரு.வே.சிவசுப்பிரமணியம் ஆசிரியரது வீட்டில் நிறுத்தி விட்டு கூட்டம் கூடும் இடத்திற்கு நடந்தே வந்தார். மக்களும் மேளதாளத்தோடு மாலை அணிவித்து மிகவும் மரியாதையாக அழைத்து வந்தனர். அன்றைய தினம் தனது பேச்சின் போது, தான் இவ்விடத்திற்கு மோட்டார் வாகனத்தில் வரமுடியாது நடந்தே வரவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அடுத்த முறை இவ்விடத்திற்கு வருவதாயிருந்தால் தனது மோட்டார் வாகனத்திலேயே இவ்விடம் வந்து இறங்குவேன் எனக் கூறினார். அவர் அப்பொழுது பாராளுமன்றத்தில் செல்வாக்குள்ளவராகவும் இருந்தபடியால் குறுகிய காலத்தில் வீதிக்கு ரூபா 10000/= ஒதுக்கப்பட்டது. அப்போது சதத்தில் பணப் புழக்கம். இப்போது இத் தொகை பத்துக் கோடிக்குச் சமனாகும். இவ் வீதியை புனரமைக்க காரைநகைரைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அவரும் விரைவில் வீதியைச் சீரமைத்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினரும் தாம் கூறியவாறு மோட்டார் வாகனத்தில் வந்திறங்கினார். இவ் வீதி சீரமைக்கப்பட்டதால் கிராமமும் மக்களும் பெரிதும்

அபிவிருத்தியடைந்ததோடு பல நன்மைகளும் கிடைக்கப் பெற்றவராயினர்.

இவ்வேளை இக் கிராமத்து மக்களை ஒன்று படுத்துவதில் திரு.க.சதாசிவமும் திரு.வே.பொன்னம்பலமும் பெரிதும் முயற்சியெடுத்தனர். ஓரளவு வெற்றியும் நிறைவும் பெற்றனர்.




**பாடசாலை ஆரம்பம்**

இக்கிராமத்துப் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியை யா/கோவிலாக்கண்டி மகாலக்குமி வித்தியாசாலையில் கற்று வந்தனர். ஐந்தாம் வகுப்பு வரையுள்ள அப்பாடசாலையிற் கற்றவர்கள் அதனோடு தமது கற்றலையும்,சிலர் நாலாந்தரத்தோடும் நிறுத்தியுள்ளனர். இதற்கு அவர்களது போக்குவரத்து வசதியீனமும் வறுமையும் காரணமாக அமைந்துள்ளது. இக்காலத்தில் நான்

க.பொ.சா/தரப்(SLC) பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.உ/தரம்(HSC) சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்று வந்த வேளையில் திரு.ந.இளையப்பா ஆசிரியர் அவர்களைச் சந்தித்த வேளையில்,இக் கிராமத்துப் பிள்ளைகள் தொடர்ந்து கல்வி கற்காமல் நிறுத்தியதைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு என ஒரு பாடசாலையை எமது கிராமத்திலே ஆரம்பித்தால் அவர்கள் தொடர்ந்து கற்கச் சந்தர்ப்பம் உண்டாகுமென, ஆண்டவன் அருளால் உதித்த எனது எண்ணக் கருத்தினை வெளிப்படுத்தினேன். அதற்கு அந்த நல்ல உள்ளம் கொண்ட பெரியவரும் தானும் வேண்டிய உதவி செய்வதாகவும் பாடசாலையை ஆரம்பிக்கும்படியும் கூறினார். அப்போதுள்ள சமூக, சமுதாய சூழ்நிலை இக் கைக்காரியத்துக்கு கடும் எதிர்ப்பும், பகையும் கிடைக்கும் என்றுணர்ந்தும் நல்லதொரு காரியத்துக்கு ஆண்டவன் பக்க பலமாக துணைநிற்பான் என்ற அசையாத துணிச்சலோடும், நம்பிக்கையோடும் பாடசாலை ஆரம்பிக்கத் தொடங்கினேன்.



பாடசாலை நடாத்துவதற்கு ஒரு இடம், கட்டிடம் தேவைப்பட்டது. அப்பொழுது கடற்றொழிளாருக்கென கட்டிடம் ஒன்று புதிதாகக் கட்டப் பெற்ற நிலையில் இருந்தது. அதனை சங்க நிர்வாகிகளுடன் கதைத்துப் பெற்றுள்ளேன்.

1960 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 30.09.60 நவராத்திரி காலத்தின் விஜயதசமியன்று பாராளுமன்ற உறுப்பினர் திரு.வ.ந.நவரத்தினம் அவர்களைக் கொண்டு திறப்பதற்கு தீர்மானித்த வேளை அவர் அவசியம் பாராளுமன்றம் செல்ல வேண்டியிருந்ததால் துணைவியார் திருமதி இரகுபதி நவரத்தினம் அவர்களை அனுப்பியிருந்தார். அந்த அம்மையாரும் சமூகம் கொடுத்து அன்றைய தினம் பாடசாலையை அங்குரார்ப்பணம் செய்து ஆரம்பித்து வைத்தார். இப்பாடசாலை இக் கிராமத்தில் தொடக்கி வைக்கப் பெற்றதால் பிரிந்து நின்றவர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகவும் பழைய பகைமைகளை மறந்து சந்தோஷமாகவும் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

பாடசாலையை அரசு பொறுப்பேற்பதாக இருந்தால் நிரந்தரக் காணி, நிரந்தரக் கட்டிடம் தேவைப்பட்டது. இதற்காக இப்போது பாடசாலை அமைந்துள்ள காணியை உரியவர்களான திரு.மு.கனகர், திரு.ம.ஆறுமுகம், திருமதி ம.சின்னாச்சி என்போரிடம் இருந்து பெருமுயற்சி எடுத்து சம்மதம் பெறப்பட்டது. உடனே நொத்தரிசுக்கு கிளாக்கராக இருந்த திரு.வ.செல்லத்துரை என்பவரைக் கொண்டு உறுதி எழுதப்பட்டது. இனி நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டும். அதற்குரிய கல், சீமெந்து பாடசாலைக் காணிக்கு கொண்டு வர முடியாத நிலை. அந்தளவுக்கு புழுதி மணல் நிரம்பிய பாதை. திரு.சு.கந்தையா என்பவர் தனது மெசினில் கொண்டு வரும் கல், சீமெந்தை தற்போது ஆலடி அம்மன் கோயிலாகவிருக்கும் இடத்தில் பறித்துவிட்டுப் போய் விடுவார். அப்போது எம்மிடம் வண்டில் மாடு இருந்தமையால் மாடுகள் இழுக்கக்கூடிய அளவு கல், சீமெந்தை ஏற்றி பாடசாலைக் காணிக்கு கொண்டு வந்து சேர்த்தேன். ஏனைய உதவிகள் பெற்றோராலும் கிடைக்கப் பெற்று கட்டிடம் கட்டி முடிக்கப் பெற்றது. கிணற்றினைத் திரு.வியாழரத்தினமும் அவரது மகன் தியாகராசா உடன் நானும்

சேர்ந்து வெட்டினோம். மேசன் திரு.வ.சிதம்பரநாதனுக்கு நான் உதவியாளராக இருந்து கிணறு கட்டி முடிக்கப்பட்டது.

அப்பொழுது இப் பாடசாலைக்கு பயிற்றப்பட்ட ஆசிரியரான திருமதி அ.இளையப்பா அவர்கள் தலைமை ஆசிரியராகவும், திரு.வே.இராமர், செல்வி.வி.சிவபாக்கியம், செல்வி.சி.இராசேஸ்வரி பின்பு செல்வி.சி.சின்னக்குட்டி ஆகியோர் உதவி ஆசிரியர்களாகவும் கடமையாற்றினர். வகுப்புகள் தரம் I தொடக்கம் தரம் V வரையுமே நடைபெற்றன.

**அரசு பொறுப்பேற்றல்**

அப்போதுள்ள கல்விச் சட்டத்தின்படி பாடசாலை ஆரம்பித்து சில மாதங்களில் பொறுப்பேற்க வேண்டிய நிலையிருந்தும் எதிர்ப்புகள் காரணமாக காலதாமதமாகியது. அப்போது மத்துகம தொகுதி பா.உறுப்பினராக இருந்த திரு. பங்குவில என்பவரை இங்குள்ள அவரது நண்பர் பாடசாலை விடயமாகக் கதைத்ததனால் அவர் பாராளுமன்றத்தில் எமது பாடசாலையின் விபரம், நிலைமையை எடுத்துக் கூறியதால் அப்போதைய கல்வி அமைச்சர் திரு.வை.துடாவையின் உத்தரவின் பேரில் யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றிய கல்வியதிகாரி திரு.எஸ். முத்துலிங்கம் அவர்கள் 1963 ஆம் ஆண்டு தை மாதம் 30ந் திகதி பாடசாலைக்கு சமூகம் கொடுத்து அரசாங்க பாடசாலையாகப் பதிவு செய்து பொறுப்பேற்றதை சம்பவத் திரட்டுப் புத்தகத்திலும் பதிவு செய்துள்ளார். இவ் வைபவம் இக்கிராமத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை வளர்ச்சி அடையத் தொடங்கியது. 1964ஆம் ஆண்டு திரு. V.S.கந்தையா அவர்கள் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றதிலிருந்து அந்த வருடமே கிராமசபை அங்கத்தவர் திரு.வே.பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றதும், பரீட்சைகளில் மாணவர் திறமை காட்டி கல்வியில் முன்னேற்றமடைந்ததும், பெற்றார் தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றதும் மறக்க முடியாதவையாகும்.
1965, 1966 ஆகிய இரு வருடங்கள் ஆசிரிய பயிற்சி பெற்று 1967 ஆம்

ஆண்டு தொடக்கம் க/புசல்லாவை சரஸ்வதி ம.வியில் 6 வருடங்கள் கடைமையாற்றி விட்டு இப் பாடசாலைக்கு மாற்றம் பெற்று வந்த பொழுது ஆண்டு 9 வரையும் உள்ள பாடசாலையில் ஆண்டு 5 வரையும் இருப்பதைக் கண்டு அதிபர் திரு.வே.நாகராசாவுடன் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. 1975ஆம் ஆண்டு அதிபர் தரம் கிடைத்து மன்னார் மாவட்டத்திலுள்ள ம/கள்ளியடி அ.த.க பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்றேன். ஒன்பது வருடங்கள் அம்மாவட்டத்தின் பாடசாலைகளில் கடமையாற்றி விட்டு 1984ஆம் ஆண்டு யா/ கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.க்கு பிரதி அதிபராக நியமனம் பெற்றேன். அப்பொழுது யா/கல்வித் திணைக்களத்தில் பிரதம கல்வி அதிகாரியாக கடமையாற்றிய திரு.கு.சோமசுந்தரம் அவர்களின் வேண்டுகோளின் பேரில் இப்பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்றேன். அப்பொழுது பதில் அதிபராக கடமையாற்றிய செல்வி இ.வசந்தாதேவி பாடசாலைப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்.

1984ம் ஆம் ஆண்டு பாடசாலைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் 5ம் வகுப்புக்கு மேல் வகுப்புகள் வைப்பதற்கு முயற்சி எடுத்தேன். கொத்தணி முறையில் நிர்வாகம் இயங்கிய காலம் கைதடிக் கொத்தணி அதிபர் திரு.சோ.கணேசலிங்கம் தலைமையில் நடந்த அதிபர்கள் கூட்டத்துக்கு கல்விப் பணிப்பாளர் திரு. மன்சூர் அவர்களும் சமூகம் கொடுத்திருந்தார். அவரிடம் இப்பாடசாலையில் 6ம் வகுப்பு வைக்க வேண்டிய தேவைகளை எடுத்துக் கூறியதோடு அது பற்றிய கடிதமும் கொடுத்துள்ளேன். கொத்தணி அதிபர், ஏனைய அதிபர்கள் யாவரும் ஒத்துழைப்பு நல்கியதால் கல்விப் பணிப்பாளர் உடனடியாக 6ம் வகுப்பு வைப்பதற்கு அனுமதி தந்துள்ளார். அடுத்த வருடத்தில் இருந்து 6ம் வகுப்பிலிருந்து 8ம் வகுப்பு வரை மாணவர்கள் கல்வி கற்க சந்தர்ப்பம் உண்டானது. 9ம் வகுப்பு வைப்பதற்குக் கல்வி அமைச்சிலிருந்து அனுமதி கிடைக்க வேண்டும். அதற்கு இங்குள்ள கல்வித் திணைக்கள அதிகாரிகள் சிபார்சு செய்ய வேண்டும். நானும் பலமுறை வேண்டுதல் செய்தும் அவர்களும் ஏதோ காரணங்களைக் கூறி சிபார்சு செய்வதைப் பின் போட்டுக் கொண்டு வந்தார்கள்.

இந்தநிலையில் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்கள் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் மாணவர்கள் மேல் வகுப்பு படிப்பதற்குப் படும் கஷ்டங்களையும், போக்குவரத்து வசதியின்மையையும், வறுமை நிலையையும் எடுத்துக் கூறியதன் பேரில் இதனை நன்குணர்ந்து 9ஆம் வகுப்பு வைப்பதற்கு சிபார்சு செய்தமையை இந்நேரம் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். தொடர்ந்து ஏனைய வகுப்புகளும் வைக்கப் பெற்று 1996ஆம் ஆண்டு க.பொ.சா/தரப் பரீட்சை எழுத வேண்டியிருந்த பொழுது பொல்லாத காலமாக நாட்டில் யுத்தம் மூண்டது. இக் கால இடைவெளிக்குள் மாணவர்கள் கல்வியில் அதீத முன்னேற்றம் கண்டனர். கல்வி அதிகாரிகளின் பாராட்டுதலையும் நன்மதிப்பையும் பெற்றனர். இப்பாடசாலையில் பன்னிரண்டு வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் என்னோடு ஒத்துழைத்துக் கடமையாற்றிய ஆசிரியர்களின் கடமையுணர்ச்சி, அர்ப்பணிப்பான சேவை, ஆக்கபூர்வமாக கல்விப்பணி, மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றம் காணச் செய்தமையோடு பாடசாலைக்குப் பெரும் புகழையும் பெருமதிப்பையும் தேடித் தந்தன. இதனால் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நல்ல அதிபர் தெரிவில் மாவட்ட மட்டத்தில் நல்ல அதிபராகத் தெரிவுத் தெரிவு செய்யப் பெற்று கல்விப்பணிப்பாளர் திரு.இ.சுந்தரலிங்கம் அவர்களால் பாராட்டப்பெற்றுச் சான்றிதழும் பெற்றுள்ளேன். இந்தப் பெருமை எனக்கு கிடைக்கச் செய்தமை இக்காலத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களையே சாரும் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கால இடைவெளி எல்லைக்குள் பாடசாலை அபிவிருத்தியோடு கிராமத்தின் அபிவிருத்தியிலும் பங்கு பெறும் வாய்ப்பு உண்டானது. தலைமையாசிரியர் திரு.V.S.கந்தையா அவர்களது பெரும் பங்களிப்புடன் கைதடி நாவற்குழி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச் சங்கத்தின் மூலம் பாடசாலை வீதி, பாடசாலை கடற்கரை வீதி, புதிய கிணறு கட்டியது, ஒழுங்கைகள் திருத்தம் போன்ற பணிகள் செய்யப் பெற்றன.

## உணவு

இக் கிராமத்து மக்கள் சங்கக் கடையிலேயே அத்தியாவசியமான அரிசி,மா,சீனி பருப்பு போன்றவற்றை கூப்பன் முறையில் பெற்றனர். இச் சங்கக்கடை கைதடி நாவற்குழி வடக்கிலுள்ள முருக மூர்த்தி கோயிலுக்கருகில் அமைந்துள்ளது. இம் மக்கள் பெரும் வயல் வெளியைத் தாண்டியே நடந்து சென்று பொருள்களைப் பெற்று வந்தனர். மாரி, மழை காலங்களில் பெரும் இடர்ப்பாடுகளைச் சந்தித்தனர். இதனால் ஒரு பகுதியினர் கைதடி நாவற்குழி (வடக்கு) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும், ஒரு பகுதி மக்கள் கோவிலாக்கண்டி மத்தி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் கூப்பன் பொருட்களைப் பெற்று வந்தனர். நாளடையில் இவ்விரு சங்கத்தினரும் இக் கிராமத்திலேயே இரு கிளைகளை நிறுவி திரு.சி.சங்கரப்பிள்ளை ஒரு கிளைக்கு மனேஜராகவும், திரு.க.கனகரத்தினம் என்பவரை ஒரு கிளையின் மனேஜராகவும் நியமித்து பொருட்களை விநியோகித்து வந்தனர். இந்த இழிநிலையைப் போக்கும் முகமாக நாம் எமது கிராமத்துக்கென பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை நிறுவ முயற்சி எடுத்தோம். அப்போது உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்த திரு.க.சிவப்பிரகாசம் என்பவரும் அரியாலையைச் சேர்ந்த கூட்டுறவுப் பரிசோதகர் திரு.க.பொன்னுத்துரை என்பவரும் பெரும் உதவி செய்தனர். கூட்டுறவுப் பரிசோதகருக்கு அவர் வேண்டுதலின் பேரில் இம் மக்களின் தொகை விபரங்களை வேலையாள், சாதாரணம், பிள்ளை, குழந்தை என்ற வகையில் வகைப்படுத்தியும் மேலும் வேண்டிய விபரங்களையும் வழங்கி உதவினேன். அப் பெரியவர்களது முயற்சியினால் இப் பகுதிக்கு கைதடி நாவற்குழி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என தனியாக சங்கம் உருவானது. இதற்கும் கடைசி நேரத்திற் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டன. அவற்றை எழுத நான் விரும்பவில்லை.

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்திலிருந்து பொருட்கள் கொண்டு வரப்பட்டு திரு.க.ஐயாத்துரை என்பவரது வீட்டின் ஓர் அறையில் வைக்கப்பட்டு வியாபாரம் தொடங்கப் பெற்றது. திரு.க.கனகரத்தினம் மனேஜராகக் கடமையாற்றினார். திரு.வே.பொன்னம்பலம் அடிக்கடி கண்காணித்து சங்க வருவாயைப் பெருக்குவதற்கான

வழிமுறைகளை எடுத்துக் கூறியதால் ஓரிரு வருடங்களில் சங்கம் பெரும் இலாபத்தை ஈட்டியது. அந்த இலாபப் பணத்தைக் கொண்டே புதிதாகக் கட்டிடம் கட்டப் பெற்றுள்ளது. அதுவே இப்போதுள்ள சங்கக் கட்டிடமாகும்.

## உடை

கைதடி நாவற்குழி தெற்கு கி.அ.சங்கத்தின் தலைவராக இருந்த நானும் செயலாளரான திரு.ஆ.கந்தையாவும் கிராம அபிவிருத்திச் சிறு கைத்தொழிற் திணைக்களத்தினருடனும் தொடர்பு கொண்டபடியால் மீசாலையிலிருந்து ஒரு தையற் பயிற்சி ஆசிரியர் இங்கு வந்து தையல் பயிற்சி வகுப்புகளை பயிற்றுவித்தார். புதிய வடிவில் சட்டைகளை அமைக்கவும், விதம் விதமாக றேந்தைகள் பின்னவும், அழகான வகை வகையான தையற் பயற்சிகளையும் நடாத்தினார். இப் பயிற்சியால் பெண்களும் குறிப்பாக இளம் யுவதிகளும் நன்மையடைந்தனர். கண்காட்சியும் நடாத்தப்பட்டது.

## வைத்தியம்

கைதடி நாவற்குழி ஸ்ரீ மகா விஷ்ணு க.தொ.கூ. சங்கம் அதன் நிர்வாகத் திறமையால் இலங்கையில் முதற் தரமான சங்கமாகக் கணிக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது கடற்றொழிற் திணைக்களப் பணிப்பாளர் திரு.பீற்றர் அவர்கள் இங்கு சமூகம் கொடுத்து விருந்துபசாரத்தில் பங்கு பற்றிய பொழுது இங்கு வைத்தியத் தேவையை எடுத்துக் கூறிய பொழுது தான் கொழும்பு சென்று சுகாதாரப் பகுதியினருடன் கதைத்து ஒழுங்குபடுத்துவதாகக் கூறினார். சில மாதங்களின் பின் கைதடி வைத்தியசாலையிருந்து வைத்தியரும், உதவியாளரும் வார நாட்களில் இரண்டு நாட்கள் சமூகம் கொடுத்து வைத்திய சேவை ஆற்றினர். சிலரது வேண்டுகோளினால் ஏனைய கிராம மக்களும் பயன் பெறும் பொருட்டு ஆசிரியை திருமதி இராசம்மா வீட்டுக்கு மாற்றினர். பின்னர் மறவன்புலோவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இப்போது எந்த இடத்திலும் வைத்திய வசதி இல்லை.



### மின்சாரம்

நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள், பாடசாலை, கோயில்கள், பொது நிறுவனங்கள் போன்றவற்றுக்கு மின்சாரத்தின் அவசிய தேவை பற்றி கைதடி நாவற்குழி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்த பொழுது, அப்போதைய யாழ் மாவட்ட அமைச்சருக்கு மின்சாரத்தின் அவசிய தேவை பற்றிக் கடிதம் எழுதினேன். அவரிடமிருந்து எனது விடயம் கவனத்தில் எடுக்கப்படும் எனப் பதிற் கடிதம் கிடைத்தது. சாவகச்சேரிப் பிரதேச உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.சுந்தரம்பிள்ளை அவர்களுடன் மின்சாரத்தின் தேவை பற்றிக் கதைத்த பொழுது அப்பிரதேசம் நீண்ட வயல் வெளிப்பிரதேசம், அதிக பணம் தேவைப்படும், ஆசிய பவுண்டேசனுக்கு தெரியப்படுத்துகின்றேன், கிடைத்தால் உங்கள் அதிஷ்டம் எனக் கூறினார். சில மாதங்களின் பின் எமது பகுதிக்கு மின்சாரம் வழங்க அனுமதி கிடைத்ததாகவும், அது கோவிலாக்கண்டி பகுதிக்குப் போக இருப்பதாகவும் தகவல் அறிந்தோம். உடனடியாக மாவட்ட அமைச்சரது கடிதத்துடன்

நான் தனஞ்செயன் என்பவருடன் அரசாங்க அதிபரைச் சந்தித்து கடிதத்தையும் காட்டி இது எமது பகுதிக்கே வரவேண்டியது என்றும், உதவி அரசாங்க அதிபருடன் கதைத்த விடயத்தையும் கூறினேன். அவர் உடனடியாக சுன்னாகத்தில் உள்ள மின்சாரசபை அதிகாரிகளைச் சந்திக்கச் சொன்னார். உடனே சுன்னாகம் சென்று மின்சாரசபை உயர் அதிகாரிகளைச் சந்தித்து விடயத்தை எடுத்துக் கூறினேன். அவர்களும் நாளை மின்சாரக் கம்பங்களை ஏற்றிக் கொண்டு வாகனம் வரும். கைதடிச் சந்தியிலிருந்து வாகனத்தை மறித்து அவர்களுக்கு இடத்தைக் காட்டும்படியும் கூறினார்கள். அடுத்த நாட் காலை கைதடிச் சந்தியிற் காத்திருந்த வேளை மின்சாரம் பொருத்துவதற்கான வாகனம் தூண்களை ஏற்றிக் கொண்டு வந்தது. அதனை மறித்து வாகனத்தில் ஏறி இடத்தைக் காட்டினேன். கடற்கரையிலிருந்து தூண்கள் பறிக்கப்பட்டு விரைவில் வேலைகளைத் தொடங்கினார்கள். முதலாவது தூண் தற்போது வயலோரம் அம்மன் கோயில் செல்லும் வீதியில் தேங்காய் உடைத்து கற்பூரம் கொழுத்தி நாட்டப்பட்டது. திரு.க.ஆறுமுகம் இந்த இறைபணியைச் செய்தார். விரைவாக மின்சார வேலைகள் செய்து முடிக்கப் பெற்றது. மக்களும் ஒளி வெள்ளத்தில் மூழ்கி மகிழ்ச்சி கொண்டாடினர். இதுவே மின்சாரம் கிடைத்த வரலாறு. இதனைத் தொடர்ந்து கிராம அபிவிருத்திக்குப் பல வேலைத் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டன. இவ்வாறன பணிகள் தொடங்கவும் நிறைவேறவும் ஏதே ஒரு மாபெரும் சக்தி துணை நின்றதை உணர்கின்றேன்.

## வாழ்க்கை முறைகளும் வழிபாடுகளும்

ஆரம்ப காலம் இம் மக்கள் கூட்டுறவு வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வந்தனர். ஒரே காணிக்குள் பல வீடுகளைக் கட்டியும் ஒரே வீட்டில் சில குடும்பங்களுடனும் வாழ்ந்து ஒருவருக்கொருவர் ஒத்தாசையும் உதவியும் புரிந்தும் உணவு வகைகளைப் பங்கிட்டுக் கொடுத்தும் சந்தோசமாக வாழ்ந்து வரலாயினர்.

பனை ஓலையாலும், கிடுகுகளாலும் வேயப் பெற்றதும், கிடுகுகளால் மறைப்புத் தட்டிகள் அமைத்தும், மண் தரையுமாக வீடுகள் அமைந்துள்ளன. வேலிகளை கிடுகளாலும், அலம்பல்

எனும் தடிகளாலும், மட்டை வரிந்தும் மறைப்புச் செய்தனர். தற்போது மாற்றமடைந்து கல்வீடுகளாகவும் மதில் சுவர்களாகவும் மாறியுள்ளன.

கிராமத்தில் நடக்கும் இன்ப துன்ப நிகழ்வுகளில் சகலரும் பங்கு பற்றியும் சில நாட்கள் அவ் வீட்டிலேயே தங்கி நின்று உதவி செய்தும் தமதன்பை வெளிப்படுத்தினர்.

ஆதிகாலம் தொட்டு இவர்களது வழிபாட்டுத் தலங்களாக பெரும்படை அம்மன் கோயில், மகாவிஷ்ணு ஆலயம், வைரவர், வீதிகளில் சிறு கட்டிடங்களில் அமைந்த அம்மன் ஆலயங்கள் என அமைந்துள்ளன. இரண்டாகப் பிரிந்து நின்றவர்கள் தற்போது சகல ஆலயங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது மகிழ்ச்சியைத் தருவதோடு ஒற்றுமையையும் வளர்ப்பது ஆண்டவன் அருளாகும்.

இத்தோடு முன்பள்ளி பாடசாலை, அறநெறிப் பாடசாலையும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. கிராமத்தின் வளர்ச்சியில் கைதடி நாவற்குழி ஸ்ரீ மகாவிஷ்ணு க.தொ.கூ சங்கம், ஸ்ரீ மகாவிஷ்ணு சனசமூக நிலையம், ஸ்ரீ மகாவிஷ்ணு விளையாட்டுக்கழகம் போன்றவை அரும் சேவையாற்றி வருகின்றன. இன்னும் மறைந்து கிடக்கும் உண்மைகள் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும். இக்கிராமம் மேன்மேலும் சிறப்புறவும் அபிவிருத்தியடையவும் இக்கிராம மக்கள் உறுதுணையாக இருப்பதோடு குறிப்பாக அறிவுசால் பெரியவர்கள் இளைஞர்கள் யுவதிகள் அனைவரும் ஒத்துழைத்தும் நல்சேவையும் ஆற்றி கிராமத்தைச் செழிப்புறச் செய்வார்களாகுக.

**வே.இராமர்**
ஓய்வு நிலை அதிபர்

# அழிந்து செல்லும் கிராமியம்

தமிழர்களாகிய நாங்கள் சுயமான கலாசார பண்பாட்டை உடையவர்கள். எமது முன்னோர்கள் தேடி வைத்த பல நல்ல விடயங்கள் தேட்டங்களாக எங்கள் ஊர்களிலே பரவிக் கிடக்கின்றன. எங்களுக்கு மனோபலம் தந்த தேட்டங்களை எமது நாட்டின் போர், இடப்பெயர்வுகள், இயற்கை அழிவுகள் சிதைத்து விட்டன.

கடுமையாக உழைப்பவர்கள் நாங்கள். ஆற அமர இருக்கும் போது கூட வாழ்வுக்கு உரம் சேர்க்கும் உன்னதங்களாக கலைகள், விளையாட்டுகளைப் படைத்தவர்கள். அவற்றை எதிர்கால சந்ததியின் விருத்திக்குக் கையளிப்பவர்கள் எம் முன்னோர்கள்.

ஒரு கிராமத்தின் தனித்துவத்தையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்பவை அந்தக் கிராமத்தின் மரபு வழியாகப் பேணப்பட்டு வரும் இலக்கியங்கள் ஆகும். ஒரு கிராமத்தின் அகப், புறச் சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப இலக்கியப் பண்புகளும் காலப்போக்கில் மாற்றம் அடைந்து வருகின்றமையாக, நேற்று இருந்த இலக்கியத்தின் செழுமையும் தனித்துவமும் இன்றைய இலக்கியங்களில் காணப்படுவதில்லை. அது போல இன்றைய இலக்கியத்தின் போக்கு நவீனத்துவமடைந்து இன்னொரு வகையில் புதிய பிறப்பெடுத்தாலும் கிராமிய இலக்கியங்களின் தனித்துவம் என்றும் அழிந்துவிடாது.

கிராமத்து இலக்கியங்களாகக் கதைகள், பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கலைகள், விளையாட்டுகள் போன்ற கிராமிய இலக்கியங்கள், கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களின் தேவைகளையொட்டி எழுந்த தொழில் முயற்சிகள், குடும்ப உறவுகள், வாழ்க்கைத் தேவைகள், சுயபாதுகாப்பு சார்ந்த நம்பிக்கைகள் போன்றவற்றை அடியொற்றியே தோற்றம் பெற்றன.

கிராம மக்களின் நாகரீகத்தோடும் பண்பாட்டோடும் விளையாட்டு இணைந்தமையாகும். விளையாட்டை மன மகிழ்ச்சியூட்டும் செயல் என்பர். இவ்விளையாட்டுகள் பொழுதுபோக்காக மட்டுமன்றி உடல்நலம், மனநலம் பேணுபவையாகவும் உள்ளன. வாழ்க்கைக்கு பயிற்சியளிக்கும் களம் என்றும் விளையாட்டைக் கூறுவர்.

விளையாட்டு எல்லா மனித இனங்களிலும் பண்பாட்டிலும் ஒன்றாக உள்ளது. பொதுவாக விளையாட்டுக்கள் ஒரு குழுவினுடைய ஆட்டமாகவும், போட்டியை ஏற்படுத்துவதாகவும், வெற்றியை நிர்ணயிப்பதாகவும், விதிகளைக் கொண்டதாகவும் அமையும். விதிகள் பொதுவாக பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அமையும். விளையாட்டுகள் தனி விளையாட்டு, இருவர் சேர்ந்த விளையாட்டு, குழு விளையாட்டு என்றும் பாடலுள்ள விளையாட்டு, பாடலில்லா விளையாட்டு எனவும் வகைப்படுத்தலாம். அவ்வாறான விளையாட்டுக்களாக பேணிப்பந்து, கிளித்தட்டு, எல்லி குத்துதல், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், கண்கட்டி அடித்தல், சடுகுடு, ஒப்பு, கெந்தி அடித்தல், வாரோட்டம், பசுவும் புலியும், எட்டுக்கோடு, எவடம் எவடம், குளம் கரை, கீச்சு மாச்சு தம்பளம், புளிச்சல், கிட்டிப்புள், முள்ளுப்பிராண்டி, கிங்கினி நோனா, ஆச்சி ஆச்சி என்ன தேடுறாய், ஓரம்மா கடைக்கும் போனாள், அரசன் வந்தான், கொக்கன் சுட்டுதல், தாயம், மாபிள் அடித்தல், பூப்பறிக்கப் போகின்றோம், மாங்கொட்டை விளையாட்டு, மெல்லப்போய் கிள்ளிவா, காத்தாடி விடுதல், கள்ளன் பொலிஸ், சங்கு பித்தளை, ஒழித்துப் பிடித்தல், அக்காவிட்டைபோனேன் போன்ற பல விளையாட்டுகளைக் குறிப்பிடலாம்.

இவ் விளையாட்டுகளை விளையாடும் போது பெரியவர்கள், சிறியவர்கள், பெரியவர்களும் சிறியவர்களும் என்ற வகைப்பாட்டிற்குள் நின்று விளையாடினார்கள். அதுமட்டுமன்றி தந்தை, மகள், பெரியப்பா, சித்தப்பா, மச்சாள், பேரன், தாத்தா என்ற உறவு முறைகள் கூறி விளையாடியதுடன் அவர்களை உற்சாகப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும், விளையாட்டின் நுட்பங்களை அறியவும், இயற்கையாக எமக்குக் கிடைக்கும் புலக்காட்சிகளையும் நல்ல படைப்பாக்க செயல்களையும் அவர்கள் வெளிப்படுத்தி நின்றார்கள். இச்செயல்கள் ஊடாக மகிழ்ச்சி, கூட்டு முயற்சி, ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, மனத்தைரியம் ஏற்படல், ஊக்குவித்தல், பிறருக்கு உதவும் மனிதநேயம், கூட்டுணர்வினை வளர்த்துப் பிரச்சனையைத் தீர்த்தல், உளரீதியான மாற்றம், சிறந்த தொடர்பாடல், திறன்களை வெளிப்படுத்தல், தலைமைத்துவம் ஏற்றல் போன்ற சமூகப் பெறுமானங்கள் வளர்த்தெடுக்கப்பட்டன.

ஆனால் இன்று ஊர்கள் சிதைந்து விட்டன. உறவுகள் பிரிந்து விட்டன. ஊருக்குள் தொழில் நுட்பச் சாதனங்கள் புகுந்து

விட்டன. ஊரவர்கள் விளையாட்டுகளை மறந்து விட வாய்ப்புகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் விளையாட்டுகளை விளையாடுவதற்குப் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் நேரம் இருப்பதில்லை. உலகமயமாதலின் செல்வாக்கினாலும் அறிவியல் யுகத்தினை நோக்கிய வாழ்வினாலும் நாம் வேறொரு உலகத்தினைப் படைக்க முயற்சிக்கின்றோம். அவ்வாறான உலகத்தில் மனிதர்கள் மனிதர்களுடன் தொடர்புகொள்ளப்போவது மிகக் குறைவானதாகவே காணப்படும். மனிதர்கள் இலத்திரனியல் சாதனங்களுடன் தமது நெருக்கமாக உறவினை வளர்த்துக் கொள்வார்கள். இதனால் மனிதன் தனிமைப்படுத்தப்பட்டு விட்டான். அவனிடம் இயல்பாக இருந்த நல்ல மனிதப்பண்புகள் அருகிக் கொண்டே போகின்றன. நான், எனது குடும்பம் என்று மட்டும் சிந்திக்கத் தொடங்கிவிட்டான். இவ்வாறான சிந்தனைகள் நாமாக உருவாக்கிக் கொள்ளவில்லை. கடந்த காலங்களில் நடைபெற்ற போர், இடப்பெயர்வு, காணாமல் போதல் போன்றவைகள் தந்த அனுபவப் பரிசாக இச் சிந்தனை உருவானது. இச் சிந்தனையால் மனிதன் தனக்குள் முரண்படுவதுடன் சமூகத்துடன், சூழலுடன், இயற்கையுடன் கடவுளுடன் முரண்படுகின்றான். இம் முரண்பாடு வாழ்வினை அவன் இன்பமாகக் கருதாது துயர்மிகுந்த வாழ்வாகக் கருத வழிகோலுகிறது. வாழ்க்கை இன்பம் நிறைந்தது. அதனை வாழக் கற்றுக் கொள்வதற்கு தயாராகுவோம்

தொழில் நுட்ப உலகத்தில் உறவுகளைத் தொலைத்து விடாது அதனை இறுகப் பற்றி எமது எண்ணங்களை, சிந்தனைகளைச் சரியான பாதையிற் செல்ல எமது மனதை நாமே வழி நடத்துவோம்.

**திருமதி ச.ஜெயந்தி**
கைதடி நாவற்குழி தெற்கு

# ஆலய வழிபாட்டில் இசை

## இசையும் இறைவனும்.

*இறையும் இசையும் ஒன்றெனக் கண்டவன் தமிழன். ஏழிசையாயும், இசைப்பயனாயுமிருப்பவன் இறைவன். 'பண்ணின் இசையாக நின்றாய் போற்றி', 'இசை எழுகந்தன்', 'பாட்டகத்து இசையாகி நின்றான்' என்பன போன்ற தெய்வப்பாடல் வரிகள் இறைக்கும், இசைக்குமுள்ள தொடர்பினை உணர்த்துகின்றன. கோவிலின் ஒலிவடிவமே இசை. இசையின் வடிவமே கோவில். தேவாரப் பாக்களில் தக்கை, தண்ணுமை, வீணை, யாழ், தம், தகினிச்சம், தாளம், மொந்தை போன்ற பற்பல இசைக் கருவிகளின் பெயர்களைக் காண்கின்றோம். இசையைத் தோற்றுவித்த சிவபெருமான் ஆடல் வல்லானாகவுமிருப்பவன்.*

**"வேதங்கள் ஆட மிகு ஆகமம் ஆடக்**
**கீதங்கள் ஆடக் கிளர் அண்டம் ஏழ் ஆடப்**
**பூதங்கள் ஆடப் புவனம் முழுது ஆட**
**நாதம் கொண்டு ஆடினான் ஞான ஆனந்தக் கூத்தே"** *என்பார் திருமூலர்.*

*நாதவடிவினன் இறைவன் 'நாதம்' என்பதற்கின்னொலியென்றும், தலைவனென்றும் பொருளுண்டு. உலகினைப் படைத்துக் காக்கும் இறைவனே, இன்னொலியாக, இசையாக விளங்குகின்றான். தான் வணங்கும் ஒவ்வொரு தெய்வ வடிவத்துடனும் ஒரு இசைக்கருவியைச் சேர்த்தே வழிபட்டான் மனிதன். கலைத்தேவியின் கரத்தில் வீணை, கண்ணனின் கையில் புல்லாங்குழல், முக்கண்ணனிடம் உடுக்கை - இவ்வாறு வரிசைப்படுத்திப் போகலாம். இந்துக் கடவுளர் மட்டுமன்றிக் கிரேக்க நாட்டுத் தேவதைகளும் இசைக்கருவிகளோடு இணைந்து வழிபட்ட செய்தி இங்கே ஒப்பு நோக்கத்தகும்.*

*"லையர் "எனுமிசைக் கருவியைத் தோற்றுவித்தது அப்போலோ என்ற தேவதையென்பது கிரேக்கரின் நம்பிக்கை. மெஸபொடேமியாவில், 'இய' எனும் தேவதைக்கும் 'பலக்' என்ற முழவரும், இஷ்தர் எனும் தேவதைக்கும் அவளது கணவனுக்கும் மெல்லிய நாளத்தோடு கூடிய குழற் கருவியொன்றும் இணைக்கப்பட்டிருந்தன.*

## இசையும் இறை வழிப்பாட்டுத் தலங்களும்.

இசை வழிபாடில்லாத இறை வழிபாடு, சீவனற்ற சடலமென்றே கருதிப் பாடல், இன்னியம், ஆடல் முதலியவற்றையெல்லாம் இறை வாழிபாட்டுக்கென்றே முறைமைப்படுத்தி வைத்தான் தமிழன். இக் கலைகள் ஆலயங்களில் கட்டாயமாக்கப்பட்டன. இவை வெறும் பொழுது போக்குச் சாதனங்களாக மட்டும் கருதப்படவில்லை. இறை வழிபாட்டுத் தலங்களான ஆலயங்கள், அதற்காக மட்டுமன்றிக் கல்வி பயிற்றும் பெருங்கல்விச்சாலைகளாகவும் திகழ்ந்திருக்கின்றன. வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள் போன்றவற்றில் பயிற்சி பெறவந்த மாணவர்கட்கு, ஆலய வளாகங்களிற் தான், வகுப்புகள் நடைபெற்று வந்தன. இவை தவிர இசை, நாட்டியம் போன்ற கலைகளும், அங்கே தான் பரம்பரையாகப் பயிற்றப்பட்டும் போற்றிப் பாதுகாக்கப்பட்டும் வந்தன. தமிழ்ச் சமுதாயத்தின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட நிலையங்களாக ஈடிணையற்ற இந்தியக் கலாச்சாரத்தின் மையங்களாகத் திகழ்ந்தவை ஆலயங்கள். நாம் சிறந்த இசையினைத் சுவைக்கவோ, உயர்வான நாட்டிய வகைகளைக் கண்ணுறவோ கோவில்களை நாடித்தான் செல்ல வேண்டியிருந்தது. அநேகமாக, ஒவ்வொரு கோவிலிலுமே இன்னியம் வல்லார், ஆடற் கணிகையர். நிருப்பதியம் விண்ணப்பியார், பாடுலார், நட்டுவம் புரிவார் போன்ற பல்வேறு கலைஞர்கள் நிரந்தரச் சேவைக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுடைய கலைகளும், ஆலயத்தொண்டும் பரம்பரையாக வளர்ந்து வந்தன. இவர்களுக்கு மாதாந்த அல்லது வருடாந்த ஊதியம் ஆலயங்களில் வழங்கப்பட்டதோடு குடியிருக்க வீடும் பயிரிட நிலமும் மானியமாக அளிக்கப்பட்டிருந்தன. வீணைக்காணி, மேளக்காரக்காணி, நட்டுவக்காணி போன்ற சொற்கள் இவ்வித மானியங்களைக் குறிப்பனவாகவுள்ளன. தஞ்சையை ஆண்ட 1ம் இராசராச மன்னன் கொட்டி மத்தளம், உடுக்கை வாத்தியம் (குழல்) போன்ற இசைக்கருவியாளர், நடனமாதர், திருப்பதியம் விண்ணப்பிக்கும் ஓதுவார் மூர்த்தி போன்ற பல கலைஞர்களுக்கு நிவந்தமளித்த செய்திகளைக் கல்வெட்டுகளில் காண்கின்றோம் . கி.பி 1343 ஆண்டு திரிபுவனச் சக்கரவர்த்தி இராசநாராயண சம்புலராமன் என்பான் திருப்பாட்டுப் பாவோர்க்கு மானியம் அளித்துள்ளார்.

1015 ஆம் ஆண்டு திருவாய்மொழி பாடுவோருக்கும் கோயிலில் நிதம் மூவேளையும் அமுது பிரசாதம் வழங்க உத்தரவிட்டிருக்கிறான்.

*1ம் இராசேந்திரன், 1ம் குலோத்துங்கச் சோழமன்னன் கி.பி 1085ம் ஆண்டு திருப்பள்ளியெழுச்சி, திருவாய் மொழிப்பாசுரங்களை விண்ணப்பிப்பார்க்கு மானியங்கள் அளித்ததையும் திண்டிவனம் கோவிலில் வீணையிசைப்பவனுக்கு நிலங்களை அளித்த செய்தியினையும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இது போன்று இசைக்கும், கலைஞர்களுக்கும், ஆலயச் சேவை புரிவதற்காக எத்தனையோ மன்னர்கள் பேராதரவளித்து. வளர்ந்திருக்கின்றனர். நெல்லை அளித்து கொடுக்கும் அளவைக்கு ஆடல் வல்லான் எனும் பெயரினை முதலாம் இராசராசன் இட்டது இவனுக்கு இசையிலும், ஆடலிலும் உலகம் யாவையும் தன்னாடலால் ஆட்டுவிக்கும் இறைவனின் பக்தியும் அக்கலைகள், ஆலயங்களில் பெற்றிருந்த முன்னுரிமையும் நமக்கு உணர்த்துகின்றன.*

**திருமதி டுயந்தினி யூட்பற்றிக்**
*சங்கீத ஆசிரியை*
*யா/மறவன்புலோ சகலகலா வித்தியாலயம்*

# வெற்றி !

*4 வயதில், தனியாக நடக்க முடிந்தால் அது வெற்றி !*

*8 வயதில், தனியாக வெளியே சென்று வழி தவறாமல் வீடு திரும்பினால், அது வெற்றி !*

*12 வயதில், நல்ல நண்பர்கள் கிடைத்தால், அது வெற்றி !*

*18 வயதில், வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றால், அது வெற்றி !*

*22 வயதில், பட்டதாரியாகப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறினால், அது வெற்றி !*

*25 வயதில் நல்ல வேலை கிடைத்தால், அது வெற்றி !*

*30 வயதில், தனக்கென குடும்பத்தை அமைத்துக்கொள்ள முடியுமானால், அது வெற்றி !*

*35 வயதில், போதுமான அளவு சம்பாதிக்க முடியுமானால் , அது வெற்றி !*

*45 வயதில், இளைஞரைப் போன்ற உருவத்தை தக்க வைக்க முடியுமானால், அது வெற்றி !*

*50 வயதில், தன் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை அளிக்க முடியுமானால், அது வெற்றி !*

*55 வயதில் வயதில், நம் கடமைகளை தொடர்ந்து சரியாக செய்ய முடியுமானால் , அது வெற்றி !*

*60 வயதில், ஓய்வு பெற வேண்டியவர் என நிராகரிக்கப்படாமல் செயலாற்ற முடியுமானால், அது வெற்றி !*

*65 வயதில், நோயில்லாமல் வாழ முடியுமானால் , அது வெற்றி !*

*70 வயதில், மற்றவர்களுக்கு பாரமில்லாமல் வாழ முடியுமானால், அது வெற்றி !*

*75 வயதில், பழைய நண்பர்களுடன் உறவாடி மகிழ முடியுமானால், அது வெற்றி !*

*80 வயதிற்கு மேல், மற்றவர் துணை இல்லாமல் வெளியே சென்று வழி தவறாமல் வீடு திரும்ப முடியுமானால், அது வெற்றி !*

# தமிழ் வளர்த்த பெரியார் தனிநாயகம் அடிகள்

பரந்து விரிந்திருக்கும் இந்தப் பூமியில் பிறந்தவர்கள் கோடிக்கணக்காகும். இறந்து போனவர்களும் கோடிக்கணக்கே, ஆயினும் மக்கள் மனதில் இன்னமும், இனிவரும் பரம்பரையினர் மனதிலும் நிறைந்திருப்பவர்கள் சிலரே. அவர்களுள்ளும் தமிழ் வளர்த்து நிலைத்திருப்பவர் மிகச் சிலரே. அந்நிய மொழியாளர்களும், தமிழின் இனிமை கண்டு தமிழ் வளர்த்தவர்களும் அடங்கலாகச் சில சான்றோர்கள் மட்டும் இன்னமும் இறவாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே, மனித இனம் சைகை மொழியிலிருந்து மாற்றம் பெற்று ஒலி வடிவிலான மொழி பேசிய காலத்திலிருந்தே வந்த, வளர்ந்த மொழியாம் தமிழ் மொழி வளர்க்க, அவ்வப்போது சான்றாண்மையாளர்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றனர். தமிழ் மொழியும், முழு இந்திய தேசமும் ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டிருந்தவேளை தோன்றிய சுப்பிரமணிய பாரதியார் போல, சைவமும் தமிழும் நெருக்கடிக்குள்ளாகியிருந்த காலத்தில் அவதரித்த ஆறுமுகநாவலர், மறைமலை அடிகள், சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர் போல வந்து உதித்தவர் தனிநாயகம் அடிகள். தமிழ் மொழியை நன்கு கற்று உணர்ந்து தொடர்ந்து ஆராய்ந்து உலகத் தமிழினமே தமிழை நன்று அறியும் வண்ணம் தமிழ் ஆய்வு மையங்களை நிறுவி, இயக்கி உலக மொழிகளுள் தமிழே சிறப்பானது என்று நிறுவினார். இவர் ஆற்றிய சேவைகளிற்காக உலகம் இவரைப் பாராட்டிக் கௌரவித்துப் பல பட்டங்கள் வழங்கினாலும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றுக்கூடாகப் பல மாநாடுகளை உலகமெங்கும் நடாத்திய பெருமைக்குரியவர் என்றே நன்கு அறியப் பெற்றார். உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்றதும் தனிநாயகம் அடிகளே மக்கள் மனதில் வருவார். இவர் ஒரு தமிழ் நாயகம். இவருக்குத் தேவையில்லை சபாநாயகம். இவரொரு நடு நாயகம் ஆதலினால் இவர் தனிநாயகமாய் என்றும் திகழ்கின்றார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல இனிதானது எங்கும் காணோம் எனப் பாரதியார், இந்தியாவின் குறிப்பாக இப்போது பல பிரிவுகளாகப் பிரிந்து வேற்றுமை காட்டிக் கொண்டிருக்கின்ற சிறிய சிறிய மாநிலங்களின் மொழிகளை - அதிலும் தமிழோடு இணைமொழியான

மொழிகளையும் அப்போது இருந்த சூழ்நிலையில் ஆங்கிலத்தையும், பிரெஞ் மொழியையும், சமஸ்கிருதம், மலையாளம், கர்நாடகம் என பல மொழிகளைக் கற்றுத் தெரிந்து தெளிந்து கூறினார். அவற்றுக்கும் மேலாகப் பல மொழிகளைக் கற்றதுடன் ஆய்வுகளும் மேற்கொண்டவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகள். வழமையாக உலகெங்கும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவே, அந்தந்த நாட்டு மக்களின் மொழியை அறிந்து கொள்வர். அவ்வாறு தமிழ் மக்களிடையே கிறிஸ்துவத்தைப் போதிக்க வந்த வெளிநாட்டு அறிஞர்கள், தமிழ்மொழியைக் கற்றவேளை, தமிழ் மொழியின் இனிமையையும், சிறப்பையும், செழுமையையும், உண்மை நிலையையும் கண்டு தமிழ் மொழியை ஆராய்ச்சி செய்தவர்கள் பலர். மறைமலை அடிகள், வீரமா முனிவர், றொபேட்கால்வெல் ஆகியோர் அவர்களுள் சிலராகும். ஆயினும் பிறப்பால் கிறிஸ்தவராக இருந்தாலும் மொழிவழி தமிழ் மகன் ஆனதால் தமிழ் வளர்க்கும் பணிக்காகவே துறவு கொண்டார்.

பொதுவாக இலட்சியக் கனவுகளுடன் தூரநோக்குக் கொண்ட சமூகப் பார்வையுள்ளவர்களின் எண்ணங்கள் நடைமுறைக்கு வருவதைக் கண்டுள்ளோம். அவ்வகையில் இந்திய மொழிகளுடன் ஆங்கிலமும், பிரெஞ்சும் அறிந்து வைத்திருந்த பாரதியார் யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடியதைப் பல்வேறு மொழிப்புலமை கொண்ட தனிநாயகம் அடிகள் நிறுவினார். அவ்வாறே ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே என 1919 இல் உணர்வு மேலீட்டுடன் பாரதியார் பாடினார். சரியாக 30 வருட தசாப்தங்களின் பின்னர் 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அடிமைத்தனம் அகன்றது. அவ்வாறே தமிழர் வாழ்வுடனும் 30 வருட காலம் ஒன்றி-யிருப்பது கவனிக்கப்பட வேண்டியது. இதே போலவே பாரதியார் வழி நின்று இந்தப் பாதிரியார் இத்தாலி, பிரான்ஸ், ஸ்பனிஸ், ஜேர்மன், கிரேக்கம், சமஸ்கிரதம், ருஷ்யமொழி, மலாய், போர்த்துக்கல், தமிழ், சிங்களம் எனப் பல மொழிகளைக் கற்றுத் தெளிந்த பின்னர் தமிழ் மொழி இனிமையானது என்கிறார். சீர்தூக்கிப் பார்க்கப் போதிய அறிவும் திறமையும் கொண்ட இவர் கூற்று ஏற்புடையதே. அதனாலேயே இவர் நடுநாயகமாகத் திகழ்கின்றார்.

பயின்ற மொழிகளுக்குள்ளும் சிறப்பான, அச்சேறாது இருந்த நூல்களைப் பதிப்பித்ததுடன், வெளிநாட்டு நூலகங்களில் சுவடிகளாகக் காணப்பட்ட

தமிழ் நூல்களையும் அச்சேற்றி வெளியிட்டார். “சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பதற்கு” இணங்க பிறமொழி இலக்கியங்களைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதினார். தமிழ் மொழியின் சிறப்புக்களைச் சான்றாதாராங்களுடன் நிறுவியதால், கற்றறிந்த வித்தகர்கள் பாராட்டி ஒன்றிணையவே உலகத் தமிழ் ஆராய்ச்சிமன்றை 1961ம் ஆண்டு முதல் மலேசியாவில் பேராசியராக இருந்த காலத்தில் நிறுவி, உலகம் எங்கும் தமிழ் ஆய்வு மகாநாடுகளை நடாத்தவும், அழிந்து போகும் நிலையிலிருந்த அரிய தமிழ் நூல்களையும், அகராதிகளையும் மறுபதிப்புச் செய்யவும் வழிகோலினார்.

இவ்வாறு இவரால், அமைக்கப் பெற்றதும் இவர் செயலாளாராகப் பணியும் ஆற்றிய இவ் ஆய்வு மன்று மூலமாக மலேசியாவின் கோலாலம்பூரில் 1966ம் ஆண்டில் முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்தக் காரணமுமாக இருந்தார். தொடர்ந்து 1968ம் ஆண்டு சென்னையிலும் 1970ம் ஆண்டு பிரான்ஸ் நகரிலும், 4 வது தமிழாராய்ச்சி மகாநாட்டை 1974ம் ஆண்டு இலங்கையில் யாழ்ப்பாணத்திலும் நடாத்தினார். சிறுபான்மையினர் பேசும் மொழிக்கு ஒரு ஆய்வு மாநாடா என்ற காழ்ப்புணர்வில் பல தடைகளைப் போட்ட போதிலும், அத்தனையும் தகர்த்து மாநாட்டை நடத்திய வேளை பல நூற்றுக்கணக்கான வெளிநாட்டு ஆய்வாளர்கள் கலந்து கொண்டு 200ற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. உள்ளூர் வெளியூர் ஆய்வாளர்களுடனும் கலைஞர்களுடனும் அக்காலத்தில் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் சிறப்பாக நடைபெறுவது கண்ட அரச படையினர் வெகுண்டு எழுந்து குழப்பங்கள் ஏற்படுத்திப் பத்துத் தமிழ் உணர்வாளர்கள் உயிர் இழக்கவும் மேலும் பலர் காயமுறவும் காரணமாயினர். இது கண்டு மிகவும் மனம் வருந்திய அடிகள் சோர்ந்து விடாமல், துவண்டு போகாமல் 5வது மாநாட்டை 1981இல் இந்தியாவின் மதுரையில் நடாத்துவாதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்த நிலையில் 1980 ஆண்டு மறைந்தார். எனினும் அவர் திட்டமிட்டபடி 1981ம் ஆண்டு மகாநாடு மதுரையில் நடைபெற்றது. தொடர்ந்து 1987 இல் மீண்டும் மலேசியாவிலும், 7வது மாநாடு 1989 இல் மொரிசியசிலும், 1995ம் ஆண்டு தஞ்சாவூரிலும், 2015ம் ஆண்டில் 3வது முறையாக கோலாலம்பூரிலும், 10வது மகாநாடு அமெரிக்கச் சிக்காக்கோ நகரிலும், 2019 இல் நடைபெற்றது. இலட்சியவாதிகளின் கனவுகள் கனவாகிப் போவதில்லை. 5வது மாநாடு நடைபெற்ற வேளை

தமிழ் வளர்த்த இப்பெரியாருக்கு நினைவுச்சிலை அமைக்க வேண்டியும் ஏற்பட்டது. தமிழ் சமூகம் துன்பத்தில் மூழ்கியது. நெடுந்தீவு மக்களும் பெரியாரின் சேவைகளைக் கௌரவித்து நினைவுச்சிலை அமைத்துப் பேணி வருகின்றனர். 1981இல் யாழ் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டமும் வழங்கிக் கௌரவித்தது. ஆயினும் தமிழ்த் தூதுவர் தனிநாயகம் அடிகளார் என்றே தமிழ்ச்சமூகம் வியந்துரைக்கின்றனர்.

வளர்ந்து வந்து இவ்வாறான சாதனைகளைப் புரியவென ஊர்காவற்துறையின், கரம்பொன் கிராமத்தில் கிறிஸ்தவப் பெற்றோர் ஸ்ரெனிஸ் லங் கணபதிப்பிள்ளை அவர்கட்கும் செசில் இராசம்மா பஸ்தியாம்பிள்ளை அன்னை அவர்களுக்கும் 2.8.1913ம் ஆண்டு மூத்த மகனாகப் பிறந்தார். குடும்பத்து மூத்த ஆண் பிள்ளையை குருத்துவக் கல்வி கற்க வைத்துப் பாதிரியார் ஆக்கும் குடும்பக்கலாசாரம் கொண்டிருந்த போதும், கல்வி கற்க விரும்பிய இவர் குருத்துவக் கல்விக்குச் செல்ல மறுத்து ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் இணைந்து ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியை யாழ்ப்பாணம் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். 17வது வயதில் சீனியர் கேம்பிரிஜ் தேர்வில் சித்தியடைந்த பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணி, முதுகலைமாணிப் பட்டங்களைப் பெற்றுக் கொண்ட பின்னர், குருவானவராகப் பயிற்சி பெற உரோமபுரி சென்று கற்று 1939இல் இறையியல் கலாநிதிப் பட்டமும் பெற்றுக் கொண்டார். இவ்வாறு தான் அமையும் என எங்கோயோ எப்பொழுதோ எழுதப்பட்டபடி எல்லாம் நிகழ்ந்தேறவே கட்டுப்பாடுகளையும், வழமைகளையும் தகர்த்துக் கொண்டு வளர்ந்து வந்தார். வழமையாகக் கிறிஸ்துவ மதத்தை விஸ்தரிக்கவென வரும் பாதிரிமார் அந்த அந்த மக்களின் மொழிகளைக் கற்றுக்கொள்வாராயினும் இவர் சென்ற நாட்டு மொழிகள் அனைத்தையும் கசடறக் கற்றார். சமய பாதிரியாராக, ஆசிரியராக, பேராசியராக, ஆய்வாளர், சிறந்த மேடைப் பேச்சாளர், நல்ல படைப்பாளியாகவும் உயர்ந்து "தமிழ்த்தூது" தனிநாயகம் அடிகளானார்.

தமிழ் மொழி அறிவும், தமிழ்ப் பற்றும் கொண்ட அடிகளார் உலகில் தான் சென்ற நாடுகளிலெல்லாம் தமிழையும் அந்தந்த நாட்டின் பாடத்திட்டத்தில், ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ள வழிவகுத்ததுடன், ரோமபுரியில் கற்றுக் கொண்டிருந்த காலங்களில் வீரமாமுனிவர் கழகத்தை உருவாக்கி தமிழோசை உலகெலாம் பரவிச் செல்லவும் வகை

செய்தார். இன, மத, மொழி, தேச வேறுபாடுகளின்றி தமிழ் மொழியின் பண்பாட்டியலையும், கலாசாரம், நாகரீகம் போன்றவற்றையும் எடுத்துக்கூறி தமிழ்மொழி பேசுபவர்களின் அறநெறி வாழ்வையும், பண்பாட்டு இயலையும் உலகறியச் செய்தார். இவரது தீவிர தமிழ் மொழிப்பற்று, உலக மொழிகளில் இருந்த ஞானம், மொழி ஆய்வு, ஆற்றல், ஒப்பியல், நடுநாயகம் என்பன தமிழ் மொழி போல இனிதானது எங்கணும் இல்லை என்று ஆணித்தரமாகக் கூற முடிந்தது, நிலை நிறுத்த முடிந்தது. வசதிகள் குறைந்த கிராமங்களில் பிறந்தாலும் இளைஞர் யுவதிகளும் இவரைப் பின்பற்றுவோர்களும், விடாமுயற்சியும், கூர்ந்து அவதானிக்கும் திறனும், பகுத்துணர்ந்து ஏற்றுக் கொண்டு அதன் வழி நடந்தால் வளர்ந்து எழலாம் என வாழ்ந்து காட்டியவர்.

1951ம் ஆண்டு தமிழ் எழுச்சி விழாவில் கலந்து கொண்ட இவர் ஆங்கில மொழியை வணிகத்தின் மொழி எனவும், இலத்தீன் சட்டத்தின் மொழி, கிரேக்கம் இசையின் மொழி, இத்தாலி காதலின் மொழி, பிரெஞ்சு தூதின் மொழி எனவும் வகுத்துக்கூறி, தமிழ் இணக்கத்தின் மொழி, அன்பின் மொழி, இரக்கத்தின் மொழி, பக்தி மொழி எனவும் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். பல்வேறு மொழிகளை அறிந்திருந்தமையாலன்றோ இவ்வாறு பகுத்துக்கூறவும் துணிந்து கூறவும் முடிந்தது. இதனால் உலக மக்களின் ஆன்மீகச் சிந்தனைக்கும், அறநெறி வாழ்வு முறைக்கும், இயற்கை உணவு முறைகளுக்கும் மாறி வருகின்றனர். தன் ஊன் பெருகுவதற்கு பிற உயிர்களைக் கொன்று உண்ணும் வாழ்க்கை முறை-யிலிருந்து மாறிவருவதுடன் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட மருத்துவக் குளிகைகளை விட்டு மூலிகை வைத்திய முறைமைக்கு மாறி வருகின்றனர். இக்காலப் பகுதியில் தமிழ்த்தூது என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டார். அத்துடன் தமிழர் பண்பாடு நேற்றும் இன்றும் ஒரு உலகம், திருவள்ளுவர், ஒழுக்கவியலில் திருக்குறள் போன்ற தமிழ் நூல்களையும் பல ஆங்கில நூல்களையும் வெளியிட்டார். இவை யாவும் தமிழரின் பெருமையை எடுத்துக்கூறுவனவாக அமைந்ததால் தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகள் என அழைப்பார்கள்.

1883ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சிக்காக்கோ நகரில் மதச் சீர் திருத்தங்கள் அவசியமானவை என்றும், அன்பையே போதிக்கின்ற எல்லா மதங்களும், மதப்பிரிவுகளும் முரண்பட்டு நிற்கின்ற குழப்பங்கள் விளைவிக்கின்ற மதங்கள் போதிக்கின்ற அன்பையும் அறிவையும்

தெளிவுபட எடுத்துக்கூறி, உலகப் பொதுமதம் என்றொரு அன்பு மதத்தைப் பின்பற்ற உலக மக்கள் அனைவரையும் இணைத்தது போல், யப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் இவர் சொற்பொழிவுகள் ஆற்றியதுடன், அவற்றைத் தொகுத்து தமிழர் கலாசாரம் (Tamil Culture) என்ற நூலை 1952 ஆம் ஆண்டளவில் வெளியிட்ட போது பேராசிரியர்கள் பலரும் ஆய்வு ஆக்கங்களை தந்து உதவினர். பதினைந்து வருட காலம் இந் நூல் வெளிவந்து, இப்போதும் "தமிழியல்" எனும் நூலாக தொடர்ந்தும் தமிழாய்வு மையத்தினரால் அரை ஆண்டு இதழாக வெளி வருவது இவரது பணிகள் அறம் சார்ந்திருந்தமையாலேயாகும்.

"என்னை நன்கு இறைவன் படைத்தனன் தன்னை நன்கு தமிழ் செய்யுமாறே" என்றதைக் கொண்டு தமிழர் பண்பாடு என்ற நூலுடன், பண்பாடு நேற்றும் இன்றும், தமிழர் தூது, ஒரே உலகம் போன்ற நூல்களுடன் பல வேற்று மொழி இலக்கியங்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். தமிழில் தலைசிறந்த நூல்களாகிய திருவாசகம், திருக்குறள் போன்ற நூல்களை பல பிற நாட்டு மொழிகளில் மொழிபெயர்த்து தமிழுக்கு பெருமை சேர்த்தார். அந்நிய மொழிகளில் இருந்த இலக்கியங்களை தமிழில் மொழிபெயர்த்து எழுதி பாரதியாரின் "சென்று வாருங்கள் எட்டுத்திக்கும் கலை பொக்கிஷங்கள் யாவும் கொணர்ந்திடுவீர் இங்கு" என்ற இலட்சியக் கனவை நனவாக்கினார்

உலகெல்லாம் சுற்றி வந்த - வாழ்ந்த இவரை உங்கள் ஊர் எதுவெனக் கேட்டால் யாழ்ப்பாணம் என்றும், சமயத்தை கேட்டால் கிறிஸ்தவம் என்றும், உங்கள் மொழி எதுவெனக் கேட்பின் தமிழ் மொழி எனத் தயங்காமல் கூறுவார். இரு தமிழ் மொழி பேசும் தமிழர்கள் சந்திக்கும் வேளையில் "குட் மார்னிங்" (Good Morning) எனக் கூறிக் கைகுலுக்கும் பண்பாட்டை கடைபிடிப்பவர் காலத்தில், சமூகத்தில் எழுந்து நின்று "வணக்கம்" என சொல்வதற்கும், "எப்படி உள்ளீர்கள்" எனக் கூறி வரவேற்பதற்கும் தனித் தைரியம் வேண்டும். பன்மொழிப் புலமை கொண்டிருந்தும் தமிழ் மொழியையே பேச்சு மொழியாக கொண்ட இவரை இன்றைய தலைமுறை பின்பற்ற வேண்டும். எமது அன்னை மொழியை நாம் உரிய இடத்தில் முன் வைக்க வேண்டும். அதனால் தான் மூதறிஞர் "ராஜாஜி", தனிநாயகம் என்ற பெயரை கேட்டாலே எல்லா நேரமும் நான் கவரப்படுகின்றேன் என்று கூறினார். ஆயிரம் சுலோகங்கள் ஓதிக்கொண்டு இருப்பதை விடவும் செயற்படத் துணிந்து

எழுந்தால், இனம் எழுந்து விடும், என்பதைக் கருத்தில் கொண்டு தனியே எழுந்து தற்துணிவுடன் அறிஞர்களையும், ஆர்வலர்களையும் இணைத்து தமிழ் ஆராய்ச்சி மையத்தை உருவாக்கித் தமிழ் வளர்த்த பெரியார் 1980 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாம் தேதி இறைவனடி சேர்ந்தார். ஈழநாடு தன் ஒப்பற்ற தலைவனை இழந்தது. தமிழ்த் தாய் தன் ஒப்பற்ற அறிவு மகனை இழந்தாள். தமிழுலகம் உலகெல்லாம் தமிழ் வளர்த்த தமிழ்த்தூதனை இழந்தது. இவர் தனிநாயகம் சீர்தூக்கி பார்க்கச் சபாநாயகம் ஒன்று தேவையில்லை. இவரது நடுநாயகமான தீர்மானங்களுக்காகவும் வழி நடத்தலுக்காகவும் தமிழ் பேசும் மக்கள் மனதில் என்றும் நிறைந்து இருப்பார். தமிழ் பயின்று சமயம் வளர்க்கவென வந்து தமிழால் ஈர்க்கப்பட்டு தமிழனாக மாறி தமிழ் வளர்த்த பல வெளிநாட்டு அறிஞர்களைக் கண்ட நாடு இது. ஆயினும் தமிழராகப் பிறந்து சமயம் வளர்த்துக் கொண்டு தமிழராய் வாழ்ந்தவர். தமிழுக்கு செய்த தொண்டுகளுக்காக தனிநாயகம் அடிகளாக உயர்ந்து நிற்கின்றார். பழமைகளை வசதியாக இலகுவில் மறந்து விடும் நாங்கள் பொய்யும் புனைவும் கற்பனைகளும் மிகுந்து கட்டாயப்படுத்தி திணிக்கும் வரலாறுகளுக்கு மேலாக எமது வீர வரலாறுகளை நமது பிள்ளைகளுக்கு கடத்த வேண்டும். அறம் சார்ந்த வீர புருஷர்களாக அவர்கள் எழ வேண்டும். அறநெறிகள் இள வயதில் இருந்தே கற்றுத் தர வேண்டும். வேகமாக ஓடும் உலகில் நாமும் உலகமாக செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் ஓரங்கட்டுப்பட்டு விடுவோம். தொன்மையான மொழி, இறைவன் படைத்த மொழி, அறிஞர்கள் வளர்த்த மொழி அழியாது என்றும் வீணே காலத்தை கழியாமல் எழுவோம். விரைவாக எழுவோம் முன்னே அவர்கள் காட்டிய வழியில் நாமும் உயர்வோம் வெல்வோம்

**கந்தையா மயில்வாகனம்**
*கந்தையா கனகம்மா நிதியம்*

# பேராதனை தாவரவியற் பூங்கா

*இலங்கையில் உள்ள மிகப் பெரிய தாவரவியற் பூங்கா பேராதனை தாவரவியற் பூங்கா ஆகும். இது இலங்கையின் சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருப்பதுடன் நிறைந்த கல்விப் பெறுமானமும் கொண்டது. ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் இருந்து வருகின்றது.*

*மத்திய மாகாணத்தில் இருக்கும் கண்டி நகரத்திற்கு மேற்குத் திசை நோக்கிச் செல்கையில் 5.5 கி.மி தூரத்தில் இந்தப் பூங்கா அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 127 ஏக்கராக இருப்பதுடன் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த தேசியப் பூங்காப் பண்ணைப் பிரிவினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.*

*12ம் நூற்றாண்டிலிருந்தே இந்தப் பகுதியின் வரலாறு தொடங்குகின்றது. 1371இல் 3ம் பராக்கிரமபாகு மன்னன் இவ்விடத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டான். 1747 - 1780 வரை கண்டியை ஆண்ட இராஜசிங்கனும் இவ்விடத்தில் தற்காலிகமாக தங்கியிருந்ததாக அறியப்படுகின்றது. 1815 ஆண்டில் பிரித்தானியர்கள் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னர் அப்பகுதி அவர்கள் கைக்கு மாறியது.*

*இத் தாவரவியற் பூங்கவில் பார்ப்போர் மனதைக் கவரும் வகையில் பல வகையான தாவரங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள ஓர்க்கீட் பூங்கா மிகவும் புகழ்பெற்றதொன்றாகக் காணப்படுகின்றது. இங்குள்ள வாசனைத் திரவியத் தோட்டம், கற்றாழையகம், அந்துரியம் வளர்ப்பகம் என்பன சிறப்பம்சங்களாக உள்ளன. அத்துடன் பூங்காவிற்கு மகாவலி ஆற்றைக் கடந்த செல்லும் தொங்கு பாலமும் காணப்படுகின்றது. பூங்காவின் ஓரத்தை ஒட்டிச் செல்லும் மகாவலி ஆற்றின் கரையில் பூங்காவின் எல்லை போல மூங்கில் மரங்கள் காணப்படுகின்றன. இலங்கைத் தீவின் வடிவில் அமைக்கப்பட்ட ஒரு குளமும் பூங்கவில் அமைந்துள்ளது. இயற்கையை இரசிப்பதற்கு சிறந்த ஓர் இடமாக இப் பூங்கா காணப்படுகின்றது.*

***நிறைஞ்சன் தட்சாயிணி***
*தரம் 11*

# வரலாற்று புகழ் மிக்க பழமை வாய்ந்த சிகிரியா மற்றும் சீகிரியா சுவரோவியம்

*இலங்கையில் உள்ள சிகிரியா என்ற சிங்க மலையும் அதில் அமைந்துள்ள அரண்மனையும் உலக பாரம்பரியச் சின்னமாக ஐநாவின் அமைப்பான யுனெஸ்கோவினால் 1982ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட பெருமைக்கு உரியது. உலகளாவிய ரீதியில் தேடிப்பார்க்கும் ஓர் படைப்பாக அநுராதபுரத்தில் காணப்படும் சிகிரிய இந்த ஓவியங்கள் விளங்குகின்றன. சிகிரியா, இலங்கையில் மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளையிலிருந்து சுமார் 10 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இந்த அரண்மனையானது கி.பி 477-495 வரையிலான காலத்தில் காசியப்பன் என்பவரால் ஓர் குன்றை மையமாகக் கொண்டு கட்டப்பட்டது ஆகும். இதன் சுவரில் அழகான ஓவியங்கள் வரையப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. அந்த ஓவியங்களில் 21 பெண்களின் தோற்றம் உடைகள் ஆபரணம் மற்றும் அவர்களின் கலாசாரம் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் ஓர் ஓவியமாகக் காணப்படுகின்றது.*

*குறிப்பாக சிகிரியா சுவர் ஓவியங்கள் இயற்கையிலிருந்து பெறப்பட்ட வர்ணங்களை உபயோகித்து 21ற்கு மேற்பட்ட பெண் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இப்பெண்கள் கைகளில் மலர்களை ஏந்தியவாறும், தட்டுக்களில் மலர்களை ஏந்தியவாறும் காணப்படுவதோடு இப்பெண் உருவங்கள் வசீகரமான தோற்றத்துடனும் கவிநயத்துடனும் அகன்று ஒடுங்கிய நீண்ட கழுத்து, நீண்ட கண்கள், 2 மார்பகங்கள் கொண்ட வசீகரமாக தன்மையுடனும் கீழைத்தேயப் பெண்களை நினைவூட்டும் ஓர் சிறந்த கலைப்படைப்பாகவும் காணப்படுகின்றது. இந்தியாவிலுள்ள அஜந்தா குகைகள் போன்ற இடங்களில் வரையப்பட்ட ஓவியங்களுடன் ஒத்ததன்மையுடையனவாக இவ் ஓவியங்கள் விளங்குகின்றன.*

*குறிப்பாகச் சிகிரியா ஓவியங்களிற் காணப்படும் பெண்கள் அங்கு வாழ்ந்த பெண்களாகவும் காசியப்பனின் மனைவி மற்றும் தோழிகள் எனவும் இயற்கையிலிருந்து பெறப்பட்ட வர்ணங்களை முக்கியமாக உபயோகித்தும் முப்பரிமாணத் தன்மையை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளமை ஓர் சிறப்பான அம்சமாகும்.*

*மற்றும் இந்தச் சிகிரியா குன்றின் உயரம் ஏறத்தாள 200மீ ஆகும். இந்தப்*

பாறையின் தோற்றம் சமபாதியாக உயரத்தில் ஒரு மடிப்பாக இயற்கையாக அமைந்துள்ளது. அதனால் ஒரு சிங்கம் படுத்திருப்பது போன்ற தோற்றம் இருப்பதால் இந்த மலைக்கு சிங்கமலை என்ற பெயர் கிடைத்தது. மேலும் அழகிய தோட்டம், நீர்பாசன அமைப்பு, ஒரே மாதிரியான சீரான குளியற் குளங்கள் போன்றன சீகிரியாவை மேலும் வியக்க வைக்கும் ஒரு விசேட அம்சமாக ஆக்குகின்றன.. மற்றும் சீகிரியா வாசலிற் சிங்கத்தின் கால் அச்சு ஒன்று வரையப்பட்டதுடன் சுற்றுலாப்பயணிகளின் மனதைக் கவரும் ஓர் படைப்பாகவும் காணப்படுகின்றது.

சிங்கள மொழியிலும் இலங்கை தேசியக் கொடியிலும் சிங்கம் தொடர்புடையது. இந்த மலை சிங்கத்தை அந்த நாட்டோடு தொடர்புடையதாக்கி முன்பே ஒரு சமயோசித புத்தியுடன் அமைக்கப்பட்ட படைப்பாகக் காணப்படுகின்றது. அதனால் அந்தச் சிங்கம் ஒரு இனத்தை பிரதிபலிப்பது அல்ல. இலங்கையில் வாழும் சகல இனத்துக்கும் உரியதாக விளங்குகின்றது.

இவ்வாறு முப்பரிமாணத் தன்மையைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளமை ஓர் சிறப்பான அம்சமாகவே விளங்குகின்றது.

**ஆனந்தராசா டிலற்ஷிகா**
*தரம் 11*

# பிரசித்தி பெற்ற தம்புள்ளை பொற்கோவில்

*குகை ஓவியங்களுக்குப் பிரசித்தி பெற்ற தம்புள்ளை பொற்கோவில் இலங்கையின் மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது கொழும்புக்கு கிழக்கே 148 கிலோ மீற்றர் தூரத்திலும், கண்டிக்கு வடக்கே 72 கிலோ மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ள பழமையான குகைக் கோவிலாகும். சுற்றிலுமுள்ள சம நிலத்திலிருந்து சுமார் 160 மீற்றர் உயரத்திற்கு எழும் மலை மீது இக் குகைத் தொகுதி அமையப் பெற்றுள்ளது. இதுவரை 80ற்கு மேற்பட்ட குகைகள் இப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன. அதில் 5 குகைகள் மிகவும் முக்கியமானவைகளாகக் கொள்ளப்படுகின்றன. இங்கு புத்த பெருமானின் 153 சிலைகளும் அரசர்களின் சிலைகளும் 4 தெய்வச் சிலைகளும் காணப்படுகின்றன. அந்த 4 தெய்வச் சிலைகளில் இந்துக் கடவுள்களான விஸ்ணு, பிள்ளையார் சிலைகளும் அடங்குகின்றன.*

*சுமார் 2100 சதுர மீற்றர் பரப்புள்ள சுவர் ஓவியங்களைக் கொண்டுள்ள இக்குகைக் கோவிலில் "மாரா பேயின் சலனம்" மற்றும் புத்தரின் முதற் பிரசங்கத்தின் முத்தாய்ப்பு போன்ற மிகப் பிரசித்தி பெற்ற ஓவியங்களில் முக்கியமானவையாகும். உலகின் பாரம்பரியத் தளமாக விளங்கும் பழமையும் சிறப்பும் மிகுந்த தம்புள்ளை பொற்கோவிலை யுனேஸ்கோ நிறுவனம் 1991ஆம் ஆண்டு உலக பாரம்பரியத் தளங்களில் ஒன்றாக அறிவித்திருந்தமை இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.*

*ஆதி காலங்களில் வெறும் குகைகளாக மட்டுமே பார்க்கப்பட்டு வந்த இவை முதல் நூற்றாண்டுகளிற் தான் கோவிலாக மாற்றப்பட்டன. வலகம்மா எனும் மன்னன் தென்னிந்தியர்களால் அனுராதபுரத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தன் தலைநகரைக் கைப்பற்றியதால் தனது கடவுளுக்கு நன்றி செலுத்தும் விதத்திற் தான் இக்குகைகள் கோவில்களாக மாற்றப்பட்டன என்கிறது வரலாறு. தம்புள்ளை உல்லாசப் பயணத்துறையில் முக்கியம் வாய்ந்தது தம்புள்ளை பொற்கோவில் ஆகும்.*

**பவானந்தன் கலாஜனி**
*தரம் 11*

# புதிய வழி சமைப்போம்

அகரம் முதல் எழுத்துக்களின் ஆரம்பம்
அதுவே அன்னைத் தமிழை அலங்கரிக்க வந்த முதற் தோற்றம்
எனது கருவின் ஆரம்பமும் அன்னையின் உதிரம்
ஆண்டவன் என்ற உயர்ந்த மேலான பிரமம்
அன்னைக்குக் கொடுத்த ஒப்பற்ற வரம்
ஈண்டு இவ்வையகத்துக்கு கிடைத்த இணையில்லா பிறப்பு
பிறப்பு எனும் உயர்ந்த உன்னத வெளிச்சம்
பிறப்பு என்பது ஏழேழு ஜென்மங்களுக்கும்
தொடரும் விந்தைமிகு அற்புதம்.

ஈருடலும் ஒருயிராகக் கலந்து உருவாகும்
உன்னத சோதிப் பிழம்பு.
கருவாகி உருவாகி காசினியில் கால்பதித்து
களிப்புற்று செழித்து வளரும் கால வித்து
வித்தாகும் முன்(பு) மாதங்கள் ஈரைந்து
அன்னை உதிரத்தில் முளைகட்டிய முத்து
பத்திரமாய் பாரினில் பதியம் கொண்டு
பசுமை செழித்து வளர வந்த பயிர்
எதற்காக வந்ததோ அதற்கான பணியைத்
தொடங்கும் ஆயத்த முயற்சி
பிறந்த பொழுது இங்கு நடப்பது கலியுகம்
கலியுகத்தில் காண்பதுவோ
வலிமிகுந்த சோகம்
உள்ளங்களும் நலிந்து மலிந்து போயிற்று
பள்ளங்களும் பதைபதைப்புகளும் தான்
நாம் காண்பது.
இதைக் காணவா நாம் இந்த அரிய மானிடப்பிறப்பை எடுத்தோம்.
பூமித்தாயின் மடியில் பிறந்த நாம்
புனிதர்களாகப் புவிபோற்றும்
மனிதர்களாக அல்லவா நடக்க வேண்டும்
"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்"

இது கண்ணன் தரும் கீதோபதேசத்தின் சிலவரிகள்
அவ்வாறெனில் யோகர் சுவாமிகள் சொன்னது போல
"சும்மாயிரு என்றபடி இருந்து விட்டால்
எல்லாம்? நடக்குமா?"
சிந்திக்க வேண்டிய விடயம் தான்
சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன்
எனவே சிந்தனையின் உச்சமாய்
சீர்திருத்தப் பணிகளைச் செய்ய ஆயத்தமாவோம்
மறுமலர்ச்சி என்னும் அன்புப் பணியை
சுறுசுறுப்பாய் செய்து புதிய பாதைக்கான
வழி சமைப்போம்
இனளஞர் யுவதிகளாம் எம் இனக் குழுமத்தை
ஒன்று சேர ஒழுங்கமைத்து, உயர் இலட்சியமாம்
அன்பு தோய் மன்றங்களும் அறச்சாலைகளும்
தெருவு தோறும் தோன்றிடச் செய்திடுவோம்
சீர் திருத்தக் கருத்துக்களை செம்மையுற விளங்க வைத்து
சீர்திருத்தப் பணிகளை சீர் கொண்டு
செயற்பட முனைந்திடுவோம்
விழிப்புணர்வை வீடு வீடாகவும்
வீதி வீதியாகவும் விளங்கவைத்து
விழுமியமாம் நற்பண்புகளெனும்
செழுமைமிகு நீதி, நேர்மை, அன்பு, அகிம்சை,
பொறுமையும், சகிப்புத்தன்மையும் நாட்டின் சிறந்த
கலை கலாச்சாரம் எனும் அத்தனை நற்பண்புகளும் மலர
நறுமணம் வீசும் நல்லதொரு சமூதாயத்தை
விறுவிறுப்புடனும் வேகமுடனும் உருவாக்கி
வீரமுழக்கம் செய்து விழிப்புணர்வை உருவாக்கிட
ஒன்று சேர்வோம் உயர்ந்த வாழ்வு மலர்ந்திட
ஒற்றுமையுடன் ஒன்று கூடுவோம்
இளைஞர் யுவதிகளே ஒன்றாக செயற்பட அணிசேர்வோம்
எழுமின் விழிமின் உடன்வாரீர்

**வே.இராமர்**
ஒய்வு நிலை அதிபர்
கைதடி நாவற்குழி, கைதடி

# இருப்பதில் திருப்தி அடை

ஒரு குருவிடம் ஒருவன் வந்தான்.

"குருவே, என்னால் சந்தோஷமாகவே இருக்க முடியவில்லை. மனசு எதையோ. தேடிக் கொண்டே இருக்கின்றது" என்றான் வந்தவன்.

"அப்படியா?"

"ஆமாம் குருவே. ஆனால், என் பக்கத்து வீட்டுக்காரன் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றான். எந்தக் கவலையும் இல்லாது இருக்கின்றான். எப்படி என்றே தெரியவில்லை என்றான். என்னால் அப்படி இருக்க முடியவில்லையே என்றான்."

குரு சற்று யோசித்தார். அவனிடம் ஒரு பையைக் கொடுத்தார்.

"இதில் ஒன்பது தங்கக் காசுகள் இருக்கிறது. இதை உன் பக்கத்து வீட்டுக்காரன் வாசலில் போடு. அதன்பிறகு என்ன நடக்கிறது என்று சொல்" என்றார்.

குரு சொன்னபடியே செய்தான் வந்தவன். மூன்று நாட்கள் கழித்து குருவிடம் வந்தான்.

"குருவே, அவன் நிம்மதியே போச்சு."

"அப்படியா, ஏன்? அவனுக்குத்தான் ஒன்பது தங்கக் காசுகள் கிடைத்திருக்குமே..."

"அதான் பிரச்சனையே. விடியற் காலையில் அவன் வீட்டு வாசலில் காசுகளைப் போட்டு விட்டேன். எழுந்து வந்து பார்த்த அவன், தங்கக் காசுகளைப் பார்த்ததும் மகிழ்ச்சியாகி விட்டான். ஆனால், ஒன்பது காசுகள்தான் இருப்பதைப் பார்த்ததும், கண்டிப்பாய் பத்தாவது காசு எங்காவது விழுந்து கிடக்கும் என்று தேடத் துவங்கினான். வீட்டில் தேடினான். தெருவில் தேடினான். போகிற வருகிறவர்களிடமெல்லாம் கேட்டான். இன்னும் கேட்டுக் கொண்டே இருக்கிறான்."

"இருப்பதில் திருப்தி அடையாவிட்டால், நிம்மதி போய் விடும், புரிகிறதா?" என்றார் குரு.

# வாழ்க்கையில் முன்னேற ஏழு வழிகள்

**நன்மை தரும் 7 விடயங்கள்**

1. ஏழ்மையிலும் நேர்மை
2. கோபத்திலும் பொறுமை
3. தோல்வியிலும் விடாமுயற்சி
4. வறுமையிலும் உதவிசெய்யும் மனம்
5. துன்பத்திலும் துணிவு
6. செல்வத்திலும் எளிமை
7. பதவியிலும் பணிவு

**வழிகாட்டும் 7 விடயங்கள்**

1. சிந்தித்து பேசவேண்டும்
2. உண்மையே பேசவேண்டும்
3. அன்பாக பேசவேண்டும்.
4. மெதுவாக பேசவேண்டும்
5. சமயம் அறிந்து பேசவேண்டும்
6. இனிமையாக பேசவேண்டும்
7. பேசாதிருக்க பழக வேண்டும்

**நல்வாழ்வுக்கான 7 விடயங்கள்**

1. மகிழ்ச்சியாக இருக்க பழகுங்கள்
2. பரிசுத்தமாக சிரிக்கக் கற்று கொள்ளுங்கள்
3. பிறருக்கு உதவுங்கள்
4. யாரையும் வெறுக்காதீர்கள்
5. சுறுசுறுப்பாக இருங்கள்
6. தினமும் உற்சாகமாக வரவேற்க தயாராகுங்கள்
7. மகிழ்ச்சியாக இருக்க முயற்சி மேற்கொள்ளுங்கள்

**கவனிக்க 7 விடயங்கள்**

1. கவனி உன் வார்த்தைகளை
2. கவனி உன் செயல்களை
3. கவனி உன் எண்ணங்களை
4. கவனி உன் நடத்தையை
5. கவனி உன் இதயத்தை
6. கவனி உன் முதுகை
7. கவனி உன் வாழ்க்கையை

# 2019 இல் கந்தையா கனகம்மா நிதியத்தால் வழங்கப்பட்ட கௌரவ விருது



# நன்றி நவில்கின்றோம்

எமது தந்தையாரின் மறைவின் பின்னர் அவர் தான் நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பிய மலர் வெளியீடு என்ற பணியை தொடர வேண்டும், அவருடைய நல்ல சிந்தனைகள், செயல்கள், அவாக்கள் வெளி உலகிற்கு தெரிய வேண்டும். அதன் மூலம் அவருடைய ஆன்ம ஈடேற்றம் நிறைவுற வேண்டும் என்ற பெருவிருப்பின் காரணமாகவும், கடமையின் காரணமாகவும் அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர விரும்பி முயற்சித்தோம். அந்த வகையில் இம் முயற்சிக்கு உதவி புரிந்த கல்வியாளர்கள், சான்றோர்கள், எமது கிராமத்தவர்கள் ஆகியோருக்கு நன்றி கூறுவது எமது கடமையாகும். பலருடன் கலந்துரையாடி ஆக்கங்களைப் பெற்றுத் தந்ததோடு மிகச் சிறந்த ஆக்கமொன்றை வழங்கிய விரிவுரையாளர் கமலநாதன் அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள். அத்துடன் மலர் சிறப்புற வெளிவர ஆலோசனைகள் வழங்கிய ஓய்வு நிலை அதிபர் மே.வசந்தாதேவி அவர்களுக்கும் இப் பிரதேசத்தின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வரும் சமூக சேவையாளர் திரு.க.மயில்வாகனம் அவர்களுக்கும் நன்றிகள் பல. இம் மலரினை சிறப்பிக்கவும், மெருகூட்டவும் ஆக்கங்களையும், வாழ்த்துரைகளையும் வழங்கி எம்மை மகிழ்வித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்ந்த நன்றிகள்.

எமது தந்தையார் சிறிய சிறிய விடயங்களைக் கூட தனது நாட்குறிப்பேடுகளில் பதிவிட்டு வைக்கும் பழக்கம் கொண்டவர். அவர் பதிவிட்டு வைத்துள்ள விடயங்களையே மலராக வெளியீடு செய்துள்ளோம். இனி வருங்காலங்களில் எமது வரலாறுகள் எழுத்துருவில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எமது ஆதங்கத்தையும் கூறி இம்மலரினை வெளியீடு செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செயற்பட்டு வந்த திருவாளர் கதிரமலை சீனிவாசகம் அவர்கள் அமரத்துவம் அடைந்து விட்டார். அவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து நன்றியுரையை நிறைவு செய்கின்றோம்.

நன்றியுடன்

**குடும்பத்தினர்**

# அப்பாவின் டயரியிலிருந்து...



## நன்றி

இம்மலர் உருவாக்கத்திற்கு
உத்வேகம் தந்த திரு.க.மயில்வாகனம்
அவர்களுக்கு, என் முதற்கண் நன்றி
உரித்தாகுக.

வாழ்த்துகள், ஆசிகள் வழங்கிய
அன்புள்ளங்களுக்கும் என்றும்
நன்றிக்கு உரியவர்களாவர்.
கட்டுரைகள் போன்ற நல்ல
ஆக்கங்களைத் தந்துதவிய
பெரும்மனம் படைத்த
பெரியோர்களுக்கும் மேலும்
பல வழிகளிலும் உதவிகள்
ஒத்தாசைகள் புரிந்த மாணவர்,
ஆசிரியர், பாடசாலை நிர்வாகிகள்,
நலன்விரும்பிகள் உட்பட
சான்றோருக்கும் குறுகிய காலத்தில்
அச்சிட்டு நம் கையில் கிடைக்கச்
செய்த அச்சக உரிமையாளர்,
உதவியாளர் ஆகியோருக்கும்
மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றேன்.

**வே.இராமர்**